www.tamilarangam.net

# மரபு

14

மாசி 1993 பங்குனி



P. RAJA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE, FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாஸ்மதி அரிசி

அவுஸ்திரேலியாவில் இரண்டு வகையான பாஸ்மதி அரிசி விற்பனையாகின்றது. அவற்றிற்கிடையில் தரத்தில் உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ளுங்கள்.

எமது ஸ்தாபனம் பாக்கிஸ்தானிலிருந்து இரண்டு வகையான பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்கிறது. சுவையில் இரண்டுக்குமிடையில் மிகுந்த வேறுபாடு உண்டு.

சாதாரண பாஸ்மதி அரிசிப் பொதிகளில் நீல நிற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை அவுஸ்திரேலியா முழுவதும் விற்பனைக்கு வினியோகிக்கப்படுகின்றன.

சாதாரண அரிசியிலிருந்து சுவையில் மேம்பட்டதும், அளவில் சற்றுப் பெரியதுமான தரம் கூடிய பாஸ்மதி அரிசிப் பொதிகளில் ஆரேஞ்சு நிற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதுவே பாக்கிஸ்தானில் விற்பனையாகும் பாஸ்மதி அரிசியில் தரத்தில் உயர்ந்தது.

அவுஸ்திரேலியாவில் எமது ஸ்தாபனத்தில் மட்டுமே இந்த உயர்தரமுடைய அரிசி விற்பனையாகிறது என்பதை அறியத்தருகிறோம்.

வியாபார நேரம்:

திங்கள் – வியாழன் : 8.00 – 6.00
வெள்ளி : 8.00 – 7.00, சனி 8.00 – 5.30
ஞாயிறு & விடுமுறை தினங்கள் : 8.00 – 5.00

**Hindustan Imports**
48 - 50 Dingley Avenue, Dandenong 3175
Phone (03) 794 6640

www.tamilarangam.net

## இந்த மரபில்...

அரசியலும் இன ஒழிப்பும்

சு. இ. சிவசுப்பிரமணியம்

கொள்கைக்கும் செய்கைக்குமுள்ள தூரம்

ஈழநாட்டான்

அன்புள்ள நண்பனுக்கு

புவனன்

மெல்பன் காற்று

வாயுபகவான்

துவிதம்

செ. வே. கா.

சிட்னி கடிதம்

சிட்னி குருவி

தமிழர் நோக்கில் பண்பாடும் மொழியும்

இ. அண்ணாமலை

படித்தோம் சொல்கிறோம்

பாரதி பிரியா

'மகாவம்ச' சிங்களர் கதை

எஸ். பொ.

தேடிடும் நண்பர்களுக்கு

ராகவன்.

வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்களை மரபு வரவேற்கிறது. அத்துடன் உங்கள் மனதில் எழும் எண்ணங்களை ஏனைய வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதற்கு 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்ற பகுதியையும் பயன்படுத்தலாம். எழுதுவன யாவும் சுருக்கமாக அமைதல் விரும்பத்தக்கது.

❃ ❃ ❃

படைப்புகளில்
வரும்
கருத்துக்கள்
படைப்பாளிகளுக்கே
சொந்தம்.
கருத்துச்
சுதந்திரத்தைக்
கௌரவிக்கும்
வகையில்
'மரபு'விற்கு
உடன்பாடற்ற
கருத்துக்களும்
அதில்
வரும்.

❃

**ஆசிரியர்**

விமல் அரவிந்தன்

**அட்டைப்படம்**

K. கிருஸ்ணராஜா

**சந்தா**

அவுஸ்திரேலியா $12.00
இலங்கை, இந்தியா $10.00
ஏனைய நாடுகள் $30.00

**தொடர்புகளுக்கு**

ABIRAME PUBLICATIONS
P.O Box 232,
Wantirna South,
Victoria 3152, Australia.

**அச்சுப்பதிப்பு**

LASHA Prints
3 Viola Court, Mill Park
Victoria 3082.

**விலை**

2 வெள்ளிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மரபு

சுவடி 3 ஏடு 2

# வெளிநாட்டில் தமிழர்கள்!

வெளிநாடுகளில் வந்து நிரந்தரமாகவும், பிரஜாவுரிமை பெற்றும் வாழும் தமிழர்கள் கைக்கொள்ள வேண்டிய வாழ்க்கை முறை என்ன?

எமது பண்பாடு, கலை, கலாசாரம், மொழி, சமயம், தனித்துவம் — இவற்றையெல்லாம் நாங்கள் பேணிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவதை அடிக்கடி கேட்டிருக்கிறோம். முக்கியமான விஷயம்தான். ஆனால் இதுமட்டும் போதுமா?

எமக்குப் பக்கத்தில் எங்களைச் சுற்றி ஒரு பரந்த உலகம் இருப்பதை நாங்கள் மறந்துவிட்டு வாழ முடியாது. பல்வேறு கலாசாரங்கள், பல்வேறு மொழிகள், சமயங்கள், வேறுபட்ட வாழ்க்கை முறைகள், அரசியல் முரண்பாடுகள், சமூக விஷயங்கள்... இவற்றுக்கு மத்தியில், எம்மைச் சுற்றி ஒரு சுவர் எழுப்பிக் கொண்டு நாங்கள் வாழ்வது சாத்தியமுமல்ல; புத்திசாலித்தனமும் அல்ல.

நாம் வாழும் நாட்டின் பொதுவான ஓட்டத்திலும், அரசியலிலும், சமூக விவகாரங்களிலும் நாமும் பங்குபற்ற வேண்டியது மிக அவசியம். இது எமது உரிமையும், கடமையும் ஆகும். இது எமது 'இருப்பை' வலுப்படுத்தும். சமூக ரீதியாக ஒரு பலத்தையும், அந்தஸ்தையும் தோற்றுவிக்கும். எமக்கு ஒரு 'குரலைத்' தரும்.

உதாரணமாக, இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் மனித அநீதிகளுக்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்கும்போது கூட, அக்குரலில் கூடுதலான அர்த்தமும் புதிய பலமும் தொனிக்கும்.

*

www.tamilarangam.net



# கிளாலிக் கொலைகள்!

மீண்டும் கிளாலி ஏரிக்குள் தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரு அரசாங்கத்திற்கு, தனது பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புண்டு. இலங்கை அரசாங்கம் இதற்கு நேர் எதிராகச் செயற்பட்டு வந்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் சிங்களவர் ஆயிரமாயிரமாகக் கொன்று குவிக்கப்பட்டனர்; காணாமற் போயினர். தமிழர்களின் கதையோ இதைவிட பன்மடங்கு மோசம்; பல்லாண்டுகளாகத் தொடரும் தொடர்கதை.

நாட்டில் அமைதியை உருவாக்க வேண்டியது ஒரு அரசாங்கத்தின் கடமை. இதை சகல சமூகங்களின் நல்லெண்ணத்துடனும், நியாயத்தின் பலத்துடனும் சாதிக்கவே புத்திசாலித்தனமான ஒரு அரசாங்கம் பாடுபடும்.

ஆனால் இலங்கை அரசாங்கம் என்ன செய்கிறது? குண்டுகளைப் போட்டும், எறிகணைகளை வீசியும் சாதாரண மக்களை வருடக் கணக்காகக் கொன்றுகுவித்து வருகிறது. உடமைகளை நாசமாக்கியும், மக்களைப் பட்டினி போட்டும், அத்தியாவசிய தேவைகளை மறுத்தும் வதைத்து வருகிறது.

வடபகுதியிலுள்ள சாதாரண மக்களுக்கு, தென்னிலங்கைக்கு வந்துபோக வேண்டிய அவசிய தேவைகள் உண்டு. இது யதார்த்த நிலை. ஒன்றுபட்ட நாடாக இலங்கை இருக்கவேண்டுமென்று சொல்லும் அரசாங்கத்திற்கு இது வாய்ப்பான நிலையும் கூட. ஆனால் மூடத்தனமான இந்த அரசாங்கம் என்ன செய்கிறது? தென்னிலங்கைக்கு வந்துசெல்லும் அப்பாவித் தமிழ் மக்களை தண்ணீருக்குள் வைத்துக் கொன்று குவிக்கிறது.

இதற்கு எத்தனையோ காரணங்களை அரசாங்கம் சொல்லலாம். ஆனால் எதுவுமே மக்கள் கொல்லப்படுவதை நியாயப்படுத்த முடியாது.


அவசியமான காரணங்களுக்காகப் பெரும் சிரமங்களுக்கிடையே பயணம் மேற்கொண்டு, இதுவரை மரணித்துப்போன அப்பாவி மக்களை கருத்திற்கொண்டு, இனியும் இத்தகைய அழிவு நிகழாத வகையில் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியது சகல தரப்பாருடைய கடமையுமாகும். இதிலிருந்து வழுவுவதற்கு எந்தக் காரணமும் நியாயமான காரணமாக முடியாது.

**

www.tamilarangam.net



# அரசியலும் இன ஒழிப்பும்



சு.இ. சிவசுப்பிரமணியம்.

'இந்துக்கள்' என்று கூறிக்கொண்ட சிலர் அயோத்தியாவில் கிளப்பிவிட்ட குரோத உணர்வுகளினால் ஆயிரக்கணக்கானோர் அநியாயமாகக் கொல்லப்பட்டுவிட்டார்கள். இதில் இறந்தவர்களில் பலர், அயோத்திய விவகாரத்துடன் தங்களைத் தொடர்புபடுத்தாதவர்கள். ஆனால் வினை விதைத்த பெரிய அரசியல்வாதிகளுக்கோ அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கோ இதனால் உயிராபத்துக்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் இரு சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட வன்முறையைத் தொடர்ந்து, எவ்விதம் அரசியல் லாபம் தேடலாமென்பதிலேயே கவனம் செலுத்த முனைந்துள்ளார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியல் லாபம் அல்லது அதிகாரபலம் பெறுவது சுலபமாயிருக்கும்வரை மீண்டும் இந்து, முஸ்லிம் கலவரங்களினால் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் மடிவது தவிர்க்க முடியாததோ என்ற கேள்வி எழுகிறது. இன உணர்வுகளினால் லாபம் தேடுவோர் இந்தியா, இலங்கை, பழைய யுகோஸ்லாவியா என்று உலகம் பூராவும் பரந்துள்ளனர். அதிகாரத்தைக் கைப்பற்றுவது இவர்களுக்கு வெகு சுலபமாயிருக்கிறது. பழைய யுகோஸ்லாவியாவில் பயங்கரமாக, வெளிப்படையாகவே இனக் கொலைகளைத் தூண்டிவிட்டு, நடத்தும் மிலோசேவிக் (Milosevic) என்பவன் (வளர்ச்சியடைந்த நாடுகளின் பலத்த கண்டனங்களுக்கு உள்ளானபோதும்) சேர்பியாவின் (Serbia) ஜனாதிபதியாக வெகுசன வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான். இவனை The Butcher of the Balkans என்று Time சஞ்சிகை

www.tamilarangam.net



வர்ணித்துள்ளது. இவனது முக்கிய கொள்கை இனச் சுத்திகரிப்பென்றே (ethnic cleansing) கூறப்படுகிறது.

தமிழர்கள் கலவரங்களினால் பாதிக்கப்பட்டால் சிங்களவர் களிப்படைவர் என்று அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர் கூறினான். நரசிம்மராவும், ஆளும் காங்கிரஸ் கட்சியும் கலவரங்களுக்கு முன்னும், பின்னும் எடுத்த நடவடிக்கைகள் இனவன்முறை விதைகளை முற்றாக அழிப்பதற்குப் பதிலாக, தமது அரசாங்கத்திற்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்டவைபோலவே காணப்படுகின்றன.

அரசியல் லாபம் தேடும் சில அரசியல்வாதிகளுக்கு மக்களைத் தம் செல்வாக்குக்கு இழுப்பதற்கு, இனக்குரோத உணர்வுகள் சுலபமாகப் பயன்படுகின்றன. இன உணர்வுகள் மூலம் ஆதாயம் தேடுவதற்கு இடம் இருக்கும் மட்டும், புதிய தேசங்களையோ அல்லது எல்லைகளையோ வகுப்பதன் மூலம் இனவன்முறைகளைத் தடுப்பது இயலாதகாரியமாகிறது. இந்தியாவில் எல்லோரும் இந்துக்களாக மாறினாலும், வடநாட்டு இந்து – தென்நாட்டு இந்து என்றோ அல்லது வைஷ்ணவன் – சைவன் என்றோ இனக்கலவரங்கள் தூண்டப்படமாட்டாது என்று கூற முடியாது. இதை எழுதும்போது சமீபத்தில் விக்டோரிய இந்துச் சங்கத்தில் ஏற்பட்ட இலங்கை இந்து – இந்திய இந்து என்ற பிரச்சினை ஞாபகத்துக்கு வருகிறது.

ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட இன மக்கள் சிறுபான்மையாக இருந்தாலும் – ஒரு வீதத்திற்குக் குறைவாக இருந்தால் கூட – பல்லாண்டுகள், பல நூற்றாண்டுகளாக தமது தாயகம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் சிறுபான்மையினரைப் புறக்கணிப்பது, இம்சைப்படுத்துவது எவ்விதம் நியாயமாகும்? இனவன்முறைகளைத் தூண்டும் அரசியல்வாதிகளை தப்பிக்கவிடுவது மாத்திரமல்லாது, இவர்கள் அரசியல் லாபம் தேடுவதை அனுமதிப்பது சரியானதா? ஜனநாயக அரசியலில் தனிமனித உரிமைகளும், சிறுபான்மையினரின் சுதந்திரமும், பாதுகாப்பும் பெரும்பான்மைப் பலத்துக்குப் பலியாகவேண்டுமா? நாட்டில் ஏற்படும் வன்முறைகளுக்கு நாட்டினை ஆள்வோர் பொறுப்பேற்க வேண்டாமோ? பொறுப்பில் இருக்கும் அரசியல்வாதிகளைத் தண்டிக்க வேண்டாமோ?

பிறிதொரு இனத்திற்கெதிரான பிரசாரத்தைச் செய்யும் அல்லது வன்முறையைத் தூண்டுவோரின் அரசியல் உரிமை போன்றவற்றைப் பறிக்கும் சட்டங்களை அரசியல் யாப்பில் சேர்ப்பதன் மூலம் இனக்குரோதங்களையும், வன்முறைகளையும் தடுக்க முடியாதா? அரசியல் பதவியும், சொத்துக்களும் பறிக்கப்படும் என்றால் இனக்குரோதங்களை வளர்க்க எத்தனை 'பெரிய புள்ளிகள்' முன்வருவார்கள்? எந்தவொரு மனிதனினதோ, இனத்தினதோ நியாயமான உரிமைகள் அரசுகளினால் (எவ்வளவு பெரும்பான்மை ஆதரவைக் கொண்ட ஜனநாயக அரசாக இருந்தாலும்) பறிக்கப்படாமல், பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியமல்லவா? பெரும்பான்மை மக்கள்

www.tamilarangam.net



சிறுபான்மை மக்களை ஜனநாயகம் என்ற பெயரில் நசுக்காமல் பாதுகாப்பது மனித நாகரிகத்தில் முக்கியமாகப்படுகிறது.

சொந்த மண்ணில் அச்சமின்றி, தலைநிமிர்ந்து வாழும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியாவசியமானது. இது மனிதனின் ஜீவாதார உரிமை. இதனைப் பறிப்பதற்கு எவருக்கும் உலகமக்கள் இடமளிக்கக் கூடாது.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~



சிவசங்கரி
கடந்த இருபத்தைந்து வருடங்களாக எழுதி வருபவர். 'அக்னி' (Awakened Group for National Intergration) என்ற அமைப்பு மூலம், போதை பொருட்கள், குடி இவற்றுக்கெதிராகப் போராடி வருபவர். தமிழில் நல்ல எழுத்தாளர்களுக்கு 'அக்ஷர' விருந்து வழங்கி வருபவர்... இவர் 'சுபமங்களா'வுக்கு அளித்த பேட்டியின் ஒரு பகுதி...

? நீங்க எழுத்தாளராக இருப்பது பற்றி...

! எனக்கு ஒரு எழுத்தாளர் ஆகணும்கிற கனவோ, மோகமோ, வெறியோ இல்லாம, நான் எழுத்தாளர் ஆனேன். என்னுடைய எழுத்தை எந்த நோக்கத்தில் எழுதறேன்னு கேட்டா நான் சார்ந்திருக்கிற இந்த சமுதாயத்தை நான் ரொம்ப நேசிக்கிறேன். என்னைப் பாதிக்கிற விஷயங்களை... நான் ஆக்கபூர்வமாக பகிர்ந்துக்க என் எழுத்தை ஒரு கருவியா பயன்படுத்தறேன்.

என்னைப் பாதித்த பல விஷயங்களை அதே பாதிப்பை வாசகரிடம் உண்டுபண்ண... அந்தப் பாதிப்பு கோபமாக இருக்கலாம், நல்லதாக இருக்கலாம்... ஒரு பாதிப்பு எனக்குள்ளே உண்டாகிற போது, தீர்வுக்கு ஏதோ ஒரு வழி கிடைக்கிறமாதிரி எனக்குத் தோணுது. அதே மதிப்பை என்னுடைய வாசகர்கள்கிட்ட எழுத்தவச்சு, நான் செய்ய முடிஞ்சுதுன்னா, அவங்க, அவங்க, அந்தந்த கோணத்திலே சிந்திச்சு, தீர்வு வேணும்னா எடுத்துக்கலாம். பாதிப்பு உண்டாக்குவதுதான் என் நோக்கம், தீர்வு சொல்வதல்ல.

மிகுதி 11ம் பக்கம்...
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

www.tamilarangam.net



பாரதியார் சிந்தனைகள் (2)

# கொள்கைக்கும் செய்கைக்குமுள்ள தூரம்

" கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு " ,

என்று வள்ளுவர் பாடியிருக்கிறார். இதன் பொருள் – வாய்ப்பேச்சு ஒருமாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது – என்பதேயாம்.

கொள்கைக்கும் செய்கைக்குமுள்ள இடைவெளி பற்றிய 'பாரதி'யின் பார்வைதான் என்ன?.

இதற்கான 'பாரதி'யின் விளக்கத்திற்கு வருமுன், கொள்கை உடையவர்கள் பற்றி அவர் என்ன நினைக்கிறார்?.

"ஒவ்வொரு கொள்கையும் ஸர்வஜன ஸம்மதமாய் நன்மை பயக்கத்தக்கதாய் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஒரு கொள்கை தீமையை விளையச் செய்யினும் செய்யும். ஆனால், ஒருவர் ஒரு கொள்கைப்படி கருமங்களைச் செய்யும் பொழுது அது தனக்காவது பிறருக்காவது நன்மை தருமென்றே செய்வார்".

இப்படியாகக் கூறிய 'பாரதி', கொள்கையில்லாதவர்களைப் பற்றி என்ன கூறுகின்றார்?.

"எத்தனையோ ஜீவப்பிரேதங்கள், ஜீவியத்தின் நோக்கம் இன்னதென்றே அறியாமல், கேவலம் இந்திரிய பாதைகளைக் கழித்துக்கொண்டு, உண்டு, உடுத்தி, வாழ்ந்து, இறந்து போகின்றனர். அவர்களெல்லாம் ஏதோ நல்லதோ கெட்டதோ கொள்கைகளைக் கடைப்பிடித்துக் கருமங்களை அவற்றவற்றிற்கு உரியபடி செய்து ஜீவிக்கும் மனிதர்களல்ல".

www.tamilarangam.net



அவ்வாறாயின், 'பாரதி'யின் பார்வையில் 'ஒரு கொள்கை' என்பதென்ன?.

''பகுத்தறிவின் துணையால் செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இது, என்று ஒருவன் அறிந்து முன்பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய மனத்தால் ஒப்புக்கொள்ளும் கருமத்தொடரின் அஸ்திவாரமாகிய ஒரு கருத்தாகும்''.

''பகுத்தறியும் சக்தி இல்லாத எவனுக்கும் கொள்கையென்று ஒன்று இருக்காது'', என்று அறுதியாகக் கூறும் 'பாரதி',

''கொள்கைகளை அவாவோடு மனத்தால் கிரகித்தல் வேறு, அவற்றின்படி நடத்தல் வேறு. யாதேனும் ஒரு கொள்கையை ஒருவன் அங்கீகரித்துக்கொண்டு அதன்படி நடக்க முடியாதவனாய் இருந்தால், அவனும் ஜீவப் பிரேதந்தான்''. என்றும் அடித்துக் கூறுகின்றார்.

இன்னும் கொள்கையின் அடிப்படையில் மனிதர்களைப் பிரித்துப் பார்க்கின்றார் 'பாரதி' 'கொள்கையற்ற மானிடப் பதர்கள்', 'கொள்கையிலிருந்தும் அதன்படி நடக்க இயலாத மானிடப் பதர்கள்', 'கொள்கையை விற்று ஜீவிக்கும் மானிடப்பதர்கள்', என்று மூன்று வகையாகப் பிரித்தவர், அதிலும் முதல் இரு வகுப்பாராலும்,

''ஜன சமூகத்திற்கு அவ்வளவு கெடுதல் நேரிடாது. அவர்கள் இருக்கும்வரை சோற்றிற்குக் கேடாகவும் நிலத்துக்குப் பளுவாகவும் இருந்து போவார்கள்'' என்கிறார்.

இறுதி வகுப்பாரைப் பற்றி என்ன கூறுகிறார்?.

''கொள்கையை விற்று ஜீவிக்கும் இவர்கள், பொதுப்பீடங்களினின்றும் உலகறிய அவற்றை ஸாங்கோ பாங்கமாகப் போதிக்கிறார்கள். *பொது ஜனங்கள் அக் கொள்கைகளைக் கேட்டுப் பிரமித்து..... வெறியடைகிறார்கள்.* ஆனால், அவர்களைப் பின்தொடர்ந்து அவர்களின் வீட்டிற்குச் செல்வோமானால், அங்கே எலும்பும் தோலும் குப்பையும் சகல விதமான அழுக்குகளும் நிறைந்து கிடக்கின்றன. இம் மஹான்களின் செய்கைகள் அவர் கொண்ட கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமாய் இருக்கின்றன. 'தட்டிச் சொல்ல ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம்' என்றபடி பேசிவிட்டு, ஆபத்து வந்த காலத்தில், 'நான் சொன்னபடி நீங்கள் செய்ய வேண்டும். நான் செய்கிறபடி நீங்கள் செய்யப்படாது' என்று ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். அதிலும் கேடாய், தங்களுடைய கொள்கைகளை ஜாலவித்தைக்காரன் போல் மாற்றும் இம் மஹாபாதகர்களினால் நம் தேசத்துக்கு விளையும் தீமைகள் கணக்கில் அடங்கா. ஏனெனில், *இவர்களைப் பார்த்து அநேகம்*

www.tamilarangam.net



*அறிவில்லாத மனிதர்கள் செல்லக்கூடாத மார்க்கங்களிற் சென்று விடுகிறார்கள்.*

*நமக்கு கொள்கை வேண்டுமேயல்லாது, ஆள் வேண்டியது அவசியமில்லை. இவர்களைக் கொண்டாடுவது மதியீனம். இவர்களை எவ்வகையாலும் நாம் இகழ்ச்சி செய்தே நடத்த வேண்டும்".*

மனிதன் மனிதனாக வாழவேண்டுமென்றால், அவன் 'ஒரு கொள்கை' உடையவனாக வாழ வேண்டும். இக் கருத்தை நம்பிய 'பாரதி', சாதாரண மக்களும் புரியக்கூடிய முறையில் எழுதினார்.

**குறிப்பாகக் கொள்கையின் அடிப்படையில், 'பாரதி' மக்களைப் பிரித்துப் பார்த்த விதத்தை ஆழமான ஆய்வுக்கும், சிந்தனைக்கும் உட்படுத்துவது அவசியமானது.**

— ஈழநாட்டான் —

~~~~~~~~~~~~~~~~~~~~~~

**8ம் பக்கத்திலிருந்து...**

**? யாருக்காக எழுதறீங்கா...**

! என்னோட கண்ணோட்டம், எழுத்து, எல்லாம், புத்திசாலிங்களை விட சாதாரண ஜனங்களுக்குத்தான். ஏன்னா எனக்குத் தெரிஞ்ச விஷயங்கள் எல்லாம் சாதாரண விஷயங்கள்தாம்.

என்னுடைய அறிவுன்னு பார்த்தாலும், என்னை யாரும் இண்டெலெக்ஷீவல்னு சொல்லக் கூடாது என்கிறதுதான் என் பிரார்த்தனை. நடைமுறைப் புத்திசாலின்னு சொன்னா அது பெரிய பாராட்டு. வாழ்க்கையில் நல்லது, கெட்டதைப் புரிந்துகொண்டு அடுத்தவர்கள் வேதனையைப் புரிந்துகொண்டு ஒரு நல்ல மனிதப் பிறவியாக, வாழ்க்கையில் கூடுமானவரை முரண்டல்கள் இல்லாமல் (சமரசம்னு சொல்ல வரல்லே..) சூழ்நிலை மாற்றத்தை உணர்ந்துகொண்டு அதை என் எழுத்திலே சாதாரண மக்களுக்கு கொண்டு போனா போதும்னு நினைக்கிறேன். இதைத்தான் இத்தனை ஆண்டுகளாய் என் எழுத்தில் செய்துகொண்டு வருகிறேன்.

**? நான் ஒரு பெண்ணிலைவாதி அல்ல என்கிறீர்கள். பெண்ணிலை வாதம் என்றால் என்ன...**

! பெண்ணுரிமைக்காக சிந்தித்துப் பாடுபடும் இயக்கத்துக்குத்தான் பெமினிசம் (Feminism) என்று பெயர். பெண்கள் உரிமைன்னு எதுக்குப் பாடுபடனும்னா, அவளுக்கு மரியாதை வேணும், ஒரு தனிமனித அங்கீகாரம் வேணும், ஒரு பொம்பளையா, மனுஷியா, நபரா அவளோட விருப்பு வெறுப்புகளோட, ரசனைகளோடு, ஒரு தனி நபராக பார்க்க தவறிவிட்டதுதான் பிராப்ளம். யாரோ 'மனு' என்பவன் சொல்லிட்டு போறபடி அவ ஏன் நடக்கனும்?

**மிகுதி 16ம் பக்கம்...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
~~~~~~~~~~~~~~~~~~~~~~

www.tamilarangam.net



# அன்புள்ள நண்பனுக்கு...

புவனன்.

... இன்று நல்ல மழை. இருந்தும் யன்னலினூடாகத் தெறிக்கும் காலைக் கதிர்கூட எவ்வளவு வெம்மையாக இருக்கிறது. கட்டிற்கரை எறும்புகள் என்னை நிறையவே தொந்தரவு செய்கின்றன.

நேற்றிலிருந்து உடல்வேறு கொதித்துக்கொண்டு இருக்கின்றது. பக்கத்து அறையில் இருந்த ராமச்சந்திரனுக்கு 'பொக்கிளிப்பான்' வந்து நேற்றுத்தான் முழுகினான். எனக்கும் தொற்றிவிடுமோ என்று பயமாக இருக்கின்றது.

இந்த வேளையாகப் பார்த்துத்தான் ஏஜென்ஸிக்காரனும் 'ரிக்கற்'றுடன் வந்து நிற்பான். ராமச்சந்திரனுக்கும் இப்படித்தான்... அவன் பாவம் வருத்தத்தில் கிடந்து துடித்துக்கொண்டிருக்க ஏஜென்ஸிக்காரன் ரிக்கற்றோடு வந்து நின்றான்.

''உமக்கு நாளைக்கு Flight ஐஸே! என்ன செய்யப்போறீர்? ரெண்டு வருஷமாய் உம்மடகஸ்டம் விளங்கித்தான் இப்ப இவ்வளவு 'றிஸ்க்' எடுத்து அலுவல் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறன். நீர் என்னடாண்டா... வருத்தத்தைத் தேடி வைச்சுக்கொண்டு நிக்கிறீர். நான் என்னைஸ்ஸே செய்யிறது!''

ஏஜென்ஸி நல்லாவே நடித்தான்.

ராமச்சந்திரன் அழுதான். விக்கி விக்கி அழுதான். பார்க்கப்பாவமாக இருந்தது.

எங்கள் 'லொட்ஜில்' எல்லாமாக அறுபதுபேர் வரையில் இருக்கிறோம். 'பாங்கொக்' நகரத்தில் எல்லாமாகப் பார்த்தால் ஆயிரம்பேருக்குமேல்

www.tamilarangam.net



வரும்.

எல்லோரும் என்னைப்போலவே வெளிநாட்டு ஆசையில் வெளிக்கிட்டவர்கள்தான். ஒவ்வொருவருடைய கதைகளும் சோகம் நிறைந்தவை. யார் யாருக்கு ஆறுதல் சொல்வது?

சிவலிங்கம் என்றொரு நாற்பது வயது நண்பர் எங்களோடு இருக்கிறார். இடையிடையே சித்தப்பிரமை பிடித்தவர்போல கத்துகிறார். நேற்றுச் சாமமும் 'சிவலை' என்று அவர் போட்ட அலறல் சத்தம் இன்னமும் என் அறையில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நான் இங்கு வந்து மூன்று மாதத்திற்குள் இதுமாதிரி அலறலை பலதடவைகள் கேட்டிருக்கிறேன். ஏதாவது யோசித்துக் கொண்டிருப்பார். திடீரென்று 'ஐயோ என்ர சிவலை' என்று கத்துவார். மீண்டும் பழையபடி எங்காவது வெறித்தபடி இருப்பார். அவரைப் பார்க்கிற எல்லோருக்கும் பரிதாபமாக இருக்கும். அதேவேளை தாமும் இப்படி ஆகிவிடுவோமோ என்ற பயமும் தொற்றிக்கொள்ளும்.

'சிவலை' வேறொன்றுமல்ல. அவர் வளர்த்த காளை மாடு வயலில் ஒருநாள் உழுதுகொண்டிருந்த வேளை 'ஹெலி' மேலால் சுட்டுக்கொண்டு வந்ததாம். தான் கலப்பையையும் மாடுகளையும் அப்படியே விட்டுவிட்டு ஓடி பனைகளுக்குள்ளே ஒழிந்துவிட்டாராம். எல்லாம் அமைதியாக, திரும்பி வந்து பார்த்தபோது சிவலை செத்துக்கிடந்ததாம்.

''தரை முழுக்க ரத்தம். மற்றது வெருண்டுபோய் நிக்குது. என்ர சிவலை... ஐயோ!''. இதை அவர் சொன்னபோது பலமுறை தலையில் அடித்துக் கொண்டார். கேவிக்கேவி அழுதார். கேட்பதற்கே மிகவும் சங்கடமாக இருந்தது.

வீடு, மனைவி, பிள்ளைகளை அவர் நினைக்கும் போதெல்லாம், இறந்துபோன காளை, தனித்து நிற்கும் மற்றக்காளை நினைவில் வந்து குறுக்காடுகின்றன. வர வர அவர் நிலைமை மோசமாகிக்கொண்டே போகிறது. இவர் வெளிநாடு போவதோ அல்லது இலங்கை திரும்புவதோ கஷ்டம். பாவம்.

எங்கள் லொட்ஜில் ஆண்டுக்கணக்காக இருப்பவர்களும் இருக்கிறார்கள். இங்கு வந்தபின் சிலருக்குப் பிள்ளை கூடப்பிறந்திருக்கிறதென்றால் யோசித்துப்பாரேன்!.

ஒவ்வொருநாளும் நாளை நாளை என்று நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஏஜென்சியும் அப்படியே வடிவாகக் கதைத்துக் கொள்கிறான். இடையிடையே ஏயர்போர்ட் வரையில் கூட்டிக்கொண்டு போய்த் திருப்பிக் கூட்டிக்கொண்டு வருகின்றான். இன்று நிலைமை சரியில்லை. முதல் போனது பிடிபட்டுப் போச்சு. அடுத்த றிப் பார்ப்பம் என்பான்.

www.tamilarangam.net



எங்களுக்கு இப்ப எல்லாம் விளங்குகிறது. ஆனால் என்ன செய்வது! ஒன்றா இரண்டா! நாலரையை அல்லவா அவன் கைகளுக்குள் திணித்திருக்கிறோம். எல்லாருக்கும் சனியன் ஏழரையில் என்பார்கள். ஆனால் எங்களுக்கு இப்போ நாலரையில்.

என்னுடைய அறையில் இருக்கும் நாகராஜனும் இன்று ஏயர் போர்ட் போய்த் திரும்பி வந்தவன். இது அவனுக்கு நாலாவது முயற்சி. வீட்டிலிருந்து வெளிக்கிடும்போது இவனும் நாலரையோடுதான் வெளிக்கிட்டவன். இப்போ இரண்டோடு நிற்கிறான். முதல் தடவை மொஸ்கோவில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டவன். இரண்டாவதுதரம் ஆபிரிக்கநாடொன்றில் மூன்றாவது தடவை இந்தா! சுவிஸினுள் போய்விட்டேன் என்று நுழைய போடரில் வைத்து....

சின்ன வயதில் குடும்பமானவன். குடும்பக் கஷ்டம். கஷ்டப்பட்டுக் கட்டி முடித்த வீடும். ஆமிபாதுகாப்பு என்று கிளியர் பண்ணிக் கொண்டுவர தரைமட்டம் ஆனது. அதிகம் கதைக்கமாட்டான். சாப்பிடமாட்டான். சிலவேளைகளில் எங்காவது ஒரு மூலையில் இருந்து தேம்பித்தேம்பி அழுது கொண்டிருப்பான். பாவம். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது?.

பேயறைந்தது போல என்று கேள்விப்பட்டிருப்பாய் நேரில் பார்க்கவேண்டுமா? உடன் இங்கே வா. எங்கள் எல்லோர் முகங்களும் அப்படித்தானிருக்கும். வெளியிலிருந்து வருபவர்களைத் தவிர.

இங்கு பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், கனடா போன்ற நாடுகளிலிருந்தும் வருகிறார்கள். தங்கள் சகோதரர்களை, மனைவிமார்களைக் கூட்டிப்போக அல்லது ருறிஸ்டுகளாக.

ஏஜென்சிகாரர்களிலும் பெரும்பகுதி இவர்கள்தான். இவர்களுக்கு 'சப்' ஏஜென்ற். பிறகு அவருக்கொரு 'சப்' என்று ஏஜென்ஸிகளில் பல வகை.

ஐரோப்பாவிலிருந்து வருகிறவர்களைப் பார்க்க எங்களுக்கு ஏக்கமாக இருக்கும். விதம் விதமான உடுப்புக்கள். கை நிறையக்காசு. உதாரணத்திற்கு ஒரு பிரெஞ் பிராங்கின் பெறுமதி ஐந்து 'பாத்'துக்கள். அதோடு ஐரோப்பிய விலைகளோடு ஒப்பிடும்போது பொருட்களின் பெறுமதியும் இங்கு காற்பங்காம். பிறகென்ன கேட்கவா வேண்டும்!.

வருகிறவர்கள் காசுகளை விசுக்கி எறிவார்கள். எறிகிறவற்றை ஏந்துவதற்கென்றே எங்களில் பலர். நாங்களும்தான் என்னசெய்வது? இயலாமைதான்.

நாங்கள் இங்கு வந்தவுடன் ஏஜென்ஸிகாரன் எங்களைக் கொண்டுபோய் U.N.O வில் அகதியாகப் பதிந்து விடுவான். U.N.O எங்களுக்கு உதவிப்பணமாக மாதாந்தம் மூவாயிரம் பாத்துக்கள் தரும். இந்தப் பணம் ஒருவர் வாழுவதற்குப் போதுமானதல்ல. இருந்தபோதும்

www.tamilarangam.net



இதாவது கிடைக்கின்றதே என்ற திருப்தி. இதைவிட வேறெந்த உதவியும் எமக்குக் கிடைப்பதில்லை.

தாய்லாந்து நாட்டில் தங்குவதற்கு இரண்டு மாதம் மட்டும்தான் விசா தருவார்கள். திரும்ப விசா 'றினியூ' பண்ணுவதாக இருந்தால் வேறுநாட்டுக்குப் போய்த் திரும்பவேண்டும். அவர்களுடைய நாட்டில் அப்படி ஒரு சட்டம்.

நாங்கள் பக்கத்திலுள்ள லாவோஸ் நாட்டிற்குச் சென்று திரும்புவோம். இதற்குரிய செலவு இரண்டாயிரம் பாத். அதுவும் இந்த மூவாயிரம் பாத்திற்குள்தான் என்றால் யோசித்துப் பாரேன்!.

ஐரோப்பாவிலிருந்து வரும் நண்பர்களுக்கு நாங்கள் மலிவான கடைகள் தேடிக் காண்பிப்போம். பின் அவர்கள் வாங்கும் பொருட்களை காவியும் கொடுப்போம். அவர்கள் ஒய்யாரமாக நடந்து வருவார்கள்.

இந்த நண்பர்கள் யார் என்ற சந்தேகம் எழுகின்றதா? வேண்டாம். அவர்கள் ஐரோப்பியர்கள் அல்ல. 'சகோதரர்கள்' தான்.

சகோதரர்கள் எங்களுடன் பிரெஞ் மொழி பேசுவார்கள். டொச் மொழி பேசுவார்கள். நாங்கள் பேந்தப் பேந்த முழிப்போம். அவர்கள் கெக்கட்டம் விட்டுச் சிரிப்பார்கள். ஆனால் ஆங்கிலம் மட்டும் கதைக்கிறார்களில்லை.

எனக்கென்னவோ எங்கள் சகோதரர்களைப் பார்க்கவும் பரிதாபமாகத்தான் இருக்கிறது. சரி போகட்டும்.

ஓ! எங்கள் ரெலிபோ.ஃனை மறந்து விட்டேன். எங்கள் லொட்ஜிலிருக்கும் அந்த ஒரேயொரு ரெலிபோ.ஃனையும் கேட்டால் பல ஆயிரம் கண்ணீர்க் கதைகள் சொல்லும். இதோ! இப்பவும் அடிக்கிறது யாருக்கோ தெரியவில்லை. கீழ்மாடியில் இருப்பவர்கள் ஒருமுறை உன்னிவிட்டு மீண்டும் காத்திருப்பர். அநேகமாக அது லொட்ஜ் முதலாளிக்காகத்தானிருக்கும்.

இந்தக் காத்திருப்பு மிகவும் கொடுமையானது. எனக்கு மட்டும் பெரிதாகச் சொல்லிக் கொள்ள யாரும் இல்லாததால் இந்தப்பிரச்சனையில்லை. சிலர் காலை எட்டுமணி முதல் இரவு பதினொருமணிவரை கூடக் காத்திருப்பர். ஆனால் கோல் வராது.

மறுநாள்... மறுநாள்... மறுநாளும் இப்படியே!

இப்போ எங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் விசயங்கள் தெரிய வருகின்றன. ஐரோப்பிய அகதி வாழ்க்கையும் நாங்கள் நினைப்பது போல் இல்லையாம்.

பிரான்ஸிலிருந்து நாடு பிடிக்கவில்லையென்று நண்பன் ஒருவன்

www.tamilarangam.net



ஜேர்மனிக்கு ஓடுகின்றான். அங்கிருந்து இன்னும் பலர் சீ.. இதுவும் சரியில்லை என்று சுவிசுக்கும் கனடாவுக்கும் ஓடுகின்றார்களாம். பிறகு அங்கும் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு...

சுத்திச்சுத்தி எங்கேதான் ஓடுகின்றோம்?.

கடைசியில் எப்படியும் இலங்கைதான். பூமி உருண்டை என்று சொல்லுவதற்கு கலிலியோ பிறந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். நாங்களே போதும்.

நன்றி: ஓசை.
ஐப்பசி 1992.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

11ம் பக்கத்திலிருந்து...

'கற்பு'ன்னு எல்லோரும் மேடையிலே பேசுவாங்க. கண்ணகியா, மாதவியான்னு... எல்லார்க்கும் ரெண்டு பெண்டாட்டி மூணு பெண்டாட்டி. தமிழ் நாட்டுலதான் நாம்ப கற்பு பத்தி இவ்வளவு கத்தறோம். தமிழ் நாட்டிலேதான் ரெண்டாவது பெண்டாட்டிங்கிறது ஒரு ஒத்துக்கொள்ளக்கூடிய கொள்கையாகிப் போச்சு. கண்ணகிக்கு கோயில் வைக்கிறத பத்தி சண்டை நம்மகிட்ட இரட்டை அளவுகோல் ரொம்ப இருக்கு. பெமினிசம்னு பேசும் பொழுது நான் நினைக்கிறேன் பெண்களாக இருக்கட்டும், ஆண்களாக இருக்கட்டும், தனி நபர் அங்கீகாரம்தான் முக்யம். அது கிடைக்க என்னெல்லாம் வழி உண்டோ, அதுக்கு நாம ஒத்துழைக்கணும்னு நினைக்கிறேன். ஒரு பேச்சுக்கு சொல்றேன். ஒரு ஐம்பது வருஷம் கழிச்சு, ஆண்கள் அவங்களுக்கு மரியாதை போச்சுன்னு நினைச்சா, நாம எல்லாம் சேர்ந்து, அதை அவங்களுக்கு மீட்டு கொடுக்க பாடுபடணும்.

**? சமீபத்தில் தமிழ் 'இந்தியா டுடே'யில் நமக்கு தேவை ''பழமைவாத பெண்ணிலை வாதம்னு'' சொல்லியிருக்கீங்க. பழமைவாத பெண்ணிலைவாதம் என்றால் என்ன...**

! இயற்கை நமக்கு கொடுத்திருக்கிற சிலதை முரண்படாம ஒத்துக்கிட்டு சில உரிமைகளுக்காக போராடுவதுதான் பழைமைவாத பெண்ணிலைவாதம் (Conservative Feminism). நான் பெண்ணுங்கிறத ஒத்துக்க மாட்டேன்னு முரண்படறதுலே அர்த்தம் இல்லே.

'பழைமைவாத பென்ணிலைவாதம்' என்று இப்போ அமெரிக்காவில் சொல்ற வார்த்தையைதான் நான் இங்கே சொன்னேன்.

~~~~~~~~~~~~~~~~~~~~

www.tamilarangam.net



# மெல்பன் காற்று

ரி.வி.யும் வீடியோவும் விஞ்ஞானம் தந்த செல்வங்கள்; எங்கள் பிள்ளைச் செல்வங்களை இன்று கெடுத்துவிடுகின்றன என்று கவலைப்படும் பெற்றோர் ஏராளம். இருந்தும் அவர்களால் இதைப்பற்றி அதிகமாக ஒன்றும் செய்ய முடிவதில்லை.

பள்ளிக்கூடம் போக முன்னரும், போய்வந்த பின்னரும் ரி.வி.க்குள் முகத்தைப் புதைப்பதே பிள்ளைகளுக்கு இன்பம் தருவதாயுள்ளது. ரி.வி.யும் வீடியோவும் இல்லையென்றால் இருக்கவே இருக்கின்றன வீடியோ விளையாட்டுகள். கொம்பியூட்டர் விளையாட்டுகளும் இப்பொழுது சேர்ந்து கொண்டுவிட்டன.

''குடிகாரரை எப்பிடித் திருத்த முடியாதோ அதுமாதிரி இந்தப் பிள்ளைகளையும் திருத்த ஏலாது'' என்கிறார் விரக்தியுடன் ஒரு தந்தை. என்ன செய்யலாம்?.

இந்தச் 'சிறுதிரை' மோகத்திலிருந்து பிள்ளைகள் விடுபடவேண்டுமென்பதற்கு ஆதரவான பல காரணங்கள் உண்டு. நேரத்தை விழுங்கி ஏப்பமிடும் இந்தச் சாதனங்களால், பிள்ளைகளின் உள, உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான பல விஷயங்கள் அவர்களுக்கு மறுக்கப்பட்டுப் போகின்றன. உதாரணமாக விளையாட்டு, உடலுக்குப் பயிற்சி, மற்றவர்களோடு – பெரியவர்களோடும், சிறியவர்களோடும் – கலந்து பழகுதலும் பேசுதலும், வாசிப்புப் பழக்கம், இசை, சமூகம் போன்ற பிற விஷயங்களில் ஈடுபாடு இப்படிப் பலவற்றைச் சொல்லலாம். இதைவிட, பிள்ளைகளைக் கெட்ட வழிகளில் தூண்டக்கூடிய நிகழ்ச்சிகளும் வருகின்றன.

ஒரு வீடியோ விளையாட்டு, '' இதை விளையாடுவதால் Epilepsy நோய் ஏற்படலாம் '' என்ற எச்சரிக்கையுடன் விற்பனையாகிறது.

சில வீடுகளில் தொலைக்காட்சி பார்ப்பதில் பெற்றோர் பிள்ளைகளுக்கு 'முன்மாதிரியாக' இருக்கின்றனர். எதைப் பார்ப்பது என்பதில் போட்டி வலுக்கும் போது சிலவேளைகளில் இரண்டாவது ரி.வி.யும் வாங்கப்படுவதுண்டு.

பெற்றோராயினும் சரி, பிள்ளைகளாயினும் சரி முன்கூட்டியே தேர்ந்து, திட்டமிட்ட குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்க வேண்டும். இதற்கெனப் பத்திரிகைகளிலும், ரி.வி. நிகழ்ச்சிப் புத்தகத்திலும் விபரங்களும், விமர்சனங்களும் வருகின்றன. ஆரம்பத்திலிருந்தே பிள்ளைகளை இந்த வழியிற் பயிற்றுவிப்பதும்,

www.tamilarangam.net



அவர்கள் சந்தோஷமாக நேரத்தைச் செலவழிக்கத்தக்க வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதும் முக்கியமானவை. இதைச் சாதிக்கும் வழி பலவந்தமானதல்ல; நல்ல வழி நடத்துதலே ஆகும்.

எல்லாவற்றிலும் முக்கியம், பெற்றோரின் முன்னுதாரணம்!.

❋

நத்தார் தினத்தன்று 3CR வானொலியில் நடாத்தப்பட்ட Radiothon மூலம் ஈழத்தமிழ் அகதிகள் கழகத்துக்காக (TRO) 9 ஆயிரம் டொலர்களுக்கு மேல் திரட்டப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல விஷயம்.

நிகழச்சியில் பாட்டுகளும், பேட்டிகளும் இடம்பெற்றன. அகதிகளுக்கு உதவும் பொதுநோக்குக்காகத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து நிதி உதவினர். இந் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தமை பாராட்டத்தக்கது.

இன்னொரு காரணத்துக்காகவும் இது விரும்பத்தக்கதாக இருந்தது. நிதி சேகரித்தல் என்ற பெயரில் தரமில்லாத நிகழ்ச்சிகளுக்கு 'ரிக்கற்'றை தலையில் கட்டி விடுவதும், 'ரிக்கற்' வாங்கிவிட்டோமே என்பதற்காக இரவிரவாக இருந்து நிகழ்ச்சி பார்த்துத் தலையிடியை விலைக்கு வாங்க வேண்டி ஏற்படுவதும் இறுதியில், கொடுத்த காசில் பாதியோ, முக்கால்வாசியோ நிகழ்ச்சிச் செலவுக்குப் போய்விட, நிகழ்ச்சியும் மிஞ்சாமல் காசும் மிஞ்சாமல் போவதும் நாங்கள் கண்ணாரக் கண்டதாகும். இந்த நட்டங்களில் எதுவும் Radiothon ல் ஏற்படுவதில்லை!.

❋

வீடு தேடி ஒரு கடிதம் வந்தது. அனுப்பியவர் பெயர் இல்லை. பெறுபவர் விலாசம், பெயர், முதலெழுத்து எல்லாம் சரியாக இருந்தது.

முப்பது பிரதி எடுத்து 96 மணித்தியாலங்களுக்குள் அனுப்ப வேண்டுமாம். அல்லது அதிர்ஷ்டக் கேடாம். அனுப்பின ஒருவருக்கு 21 லட்சம் விழுந்ததாம். அனுப்பாதவருக்கு வேலை போனதாம்.

எனக்கு அனுப்ப நேரம் வரவில்லை. இதுவரை வேலை பறிபோகவில்லை. Rec காலமென்பதால் ஒன்றும் சொல்ல முடியாது. 21 லட்சம் எனக்குத் தேவையில்லை. ஆனால் வேலை போகாமலிருக்க வேண்டும்.

இலங்கையிலும் இந்தியாவிலும் இத்தகைய கடிதங்கள் அரசாங்கங்களுக்கு முத்திரை வருவாயை ஏற்படுத்தி வருவது நாங்கள் கண்டதே. இது வெளிநாடுகளுக்குமா எம்மைப் பின் தொடர்ந்து வரவேண்டும்?.

ஒரு இந்து மத ஸ்வாமியின் பெயர் இக் கடிதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில், துர்ப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது எனலாம்.

இத்தகைய கடிதச் சங்கிலித் தொடர்கள், சாதாரண மக்களின் உளப் பலவீனத்தைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு உலா வருகின்றன; அவர்களின் அறியாமையையும், அச்சத்தையும் பயன்படுத்துகின்றன.

www.tamilarangam.net



இத்தகைய கடிதங்கள் பற்றி எமது சமய ஸ்தாபனங்கள் என்ன நினைக்கின்றன?.

❋

மெல்பனில் இளங்தென்றல் கலை மன்றம் ஆண்டுதோறும் பொங்கல் விழாவை நடாத்துவதோடு, அதில் சரித்திர நாடகங்களையும் மேடையேற்றி வருகிறது. இதில் ஈடுபட்டு வரும் இளைஞர்களின் ஊக்கம் பாராட்டுதற்குரியது. நேரத்துக்குத் தொடங்கியமையும், வழமையைவிடக் குறுகிய நேரத்தில் முடிவுற்றமையும் முன்னேற்றமான அம்சங்கள். மெல்பனில் அளவுக்கு மிஞ்சி நீளும் நிகழ்ச்சிகளால் மக்கள் அதிருப்தியடைந்திருக்கின்றனர். இதனைக் கவனத்தில் எடுத்தமை பாராட்டப்பட வேண்டியது. மேலை நாட்டுச் சூழலில், 3 மணித்தியாலங்களுக்குள் நிகழ்ச்சிகள் அடங்குவதை ரசிகர்கள் வரவேற்பர்.

தரமான ஆக்கங்களைத் தரக்கூடிய ஆற்றலும், ஊக்கமும் இவர்களிடம் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் இவர்கள் தரப்போகும் நிகழ்ச்சிகளை ஆவலுடன் நாம் எதிர்பார்க்கலாம்.

❋

*வாயுபகவான்*

சிறுசஞ்சிகை அறிமுகம்...

1. சஞ்சீவி

**Chanchive**
Danmarksgade 10
7500 Holsterbro
Denmark

2. மனிதம்

**Manitham**
Postfach 12
3000 Bern 11
Switzerland

## சிட்னியில்
## கலைவட்ட நிகழ்ச்சிகள்

மெல்பனில் பல தடவைகள் மேடையேறிப் பெரும் வரவேற்பைப் பெற்ற மெல்பன் கலைவட்டத் தயாரிப்புகளான மாவை நித்தியானந்தனின் ''கண்டம் மாறியவர்கள்'' (நாடகம்), ''கொழும்பு மெயில்'' (பாட்டும் கதையும்) ஆகிய நிகழ்ச்சிகள் 3.4.93 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு, சிட்னி Burwood Girls High School மண்டபத்தில் மீண்டும் மேடையேறவிருக்கின்றன.

www.tamilarangam.net



# துவிதம்



**விஜய் தான் தேத்தா.**

**(ஹிந்திக் கதை)**

**(1991 தைமாத 'மனுஷி'
ஆங்கில இதழில் இருந்து தமிழில் செ.வே.கா.)**

ஒரு ஊரில் ஒரு பணக்காரச் செட்டி இருந்தான். அவனுடைய ஒரே மகனுக்கு மிகுந்த கோலாகலத்துடன் கல்யாணம் நடந்து முடிந்து எல்லோரும் பெண் வீட்டில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு காட்டினிடையே தங்கி களைப்பாறினார்கள். தடித்த நிழல் குளிர்ச்சியாக இருந்தது. தாமரைப் பூக்களை பிரதிபலித்த ஏரித் தண்ணீர் துள்ளித் துள்ளி ஆட்டம் காட்டியது. சூரியன் உச்சியை அண்மித்து கொண்டிருந்தது. ஆனி மாதத்துக் காற்றின் வீச்சிலே காட்டுமரங்களின் கிளைகள் படபடத்துக் கொண்டிருந்தன.

பயணத்தைத் தொடர முதல் மத்தியானச் சாப்பாட்டை முடிப்பது நல்லது என்று மாப்பிள்ளையின் தகப்பனார் தீர்மானித்த போது அதை ஏற்பது விருந்தினர்களுக்கு அவ்வளவு கஸ்டமாக இருக்கவில்லை. நிழலிலே கம்பளங்களை விரித்து பெண்ணின் ஐந்து வேலைக்காரிகளும் உட்காந்தார்கள். அருகே வெள்ளிநிறப் பட்டையில் மஞ்சள் பூச்சரங்கள் மாலைகளாய் போர்த்தியிருந்த ஒரு பெரிய மரத்தின் நிழலில் விருந்தாளிகள் உட்கார்ந்து சாப்பாடு தயாராவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

www.tamilarangam.net



சற்றே தள்ளி தனியே இருந்த மணப்பெண் தனது முகத்திரையை விலக்கி, தலையை நிமிர்த்தி மேலே பார்த்தாள். மரத்திலிருந்து தொங்கிய எண்ணற்ற பசிய துளிர்கள் கண்ணைக் குளிர்வித்தன. அந்த மரத்தின் பொந்திலே ஒரு பேய் வாசம் செய்தது. அத்தரும் எண்ணையும் பூசி வாசனை வீசிய அவளது முகத்தை மறைத்த திரையை அவள் தள்ளிய போது தெரிந்த அழகு பேயின் கண்களைக் கூச வைத்தது. ஒரு மானிடப் பெண்ணிற்கு உண்மையில் இவ்வளவு அழகும் வளமும் இருக்கமுடியுமா? ரோசாமலர்களின் சாரத்தினாலே, அவற்றின் மென்மையாலும் சுகந்தத்தினாலும் வார்க்கப் பட்டவள் போல அவள் தோன்றினாள். இப்படிப்பட்ட அழகு இந்த உலகத்திலும் உண்மையில் இருக்கிறதா? மேகங்களுக்குப் பின்னால் வாழ்கிற மின்னல்தான் இந்த உருவெடுத்து இப்படி இறங்கி வந்திருக்கிறதோ?

தேன்போல் இனிய அந்தக் கண்களை எதற்கு ஒப்பிடுவது? எல்லா அழகுகளும் அவளுடைய முகத்திலே சங்கமித்துப் படிந்திருந்தது போலத் தோன்றிற்று. ஆயிரமாயிரம் பெண்களை அவன் கண்டிருக்கிறான். ஆனால் இந்த மணப்பெண்ணிற்கு உண்மையில் யாரும் நிகரில்லை. அவளின் நிழல் பட்டே அந்த மரம் ஒளிர்ந்தது.

முதன் முதலாக தன்னுடைய வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் ஏற்பட்டதாக அந்தப் பேய்க்குத் தோன்றியது. அவளுடைய உடலிலே புகுந்து விடலாமா என்று முதலில் யோசித்தான். ஆனால் அது அவளுக்கு நோவை ஏற்படுத்தும். இந்த அழகுக்குத் துன்பத்தை ஏற்படுத்தலாமா? அவனால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. இன்னும் சொற்ப நேரத்தில் அவள் போய்விடுவாள். அவளுடைய உடலினுள் வாழ்வதன் மூலம் அவளுக்குத் துன்பத்தை ஏற்படுத்த அவனுக்கு முடியாத அதே நேரத்தில் அவள் அங்கிருந்து போய்விடுவாள் என்பதையும் அவனால் தாங்க முடியவில்லை. இதற்கு முன்பு ஒருபோதும் இப்படிப்பட்ட சங்கடம் அவனுக்கு ஏற்பட்டதில்லை. மாப்பிள்ளையின் உடலிலே புகுந்து விடலாமா? அதுவும் அவளுக்குத் துயரத்தை ஏற்படுத்தும். இத்தைகைய அழகிற்குத் துன்பம் நேர்ந்தால் மேகங்கள் மழைதர மறுக்கும். மின்னலும் ஒளித்து விடும். சூரியனும் சந்திரனும் அஸ்தமனத்திலிருந்து எழ மாட்டார்கள். இயற்கையே கொள்ளை போய்விடும். முன்னொருபோதும் யார்மீதும் அவனுக்கு இரக்கம் ஏற்பட்டதில்லை. இன்றைக்கு இத்தைகைய அழகிற்கு துன்பத்தை ஏற்படுத்துவதை விட, தானே அத்துன்பத்தை அனுபவிக்கலாமென்று அவனுக்குத் தோன்றிற்று. ஆனால் அவளுக்காகத் துன்பத்தைத்தானும் அனுபவிக்க அவனுக்கு உரிமையுண்டா? அந்தப் பேறு கிடைத்தாலே வாழ்க்கையில் அவனுக்கு வேறு ஏதும் வேண்டியதில்லை.

களைப்பாறியதும் அவர்கள் அங்கிருந்து போதல் நிச்சயம். மணப்பெண் எழுந்த போது பேயின் கண்களின் முன்னே இருள் சேர்ந்தது. இருட்டில் பார்ப்பதற்கே பழகிப்போன அந்தக் கண்கள் இப்படிப் புகையடைந்து போனது எவ்வாறு? நண்பகலிலேயே எப்படி சூரியனை

www.tamilarangam.net



கருமை மறைத்தது?

மெட்டிகள் குலுங்க மணப்பெண் மாப்பிள்ளையின் வண்டியில் ஏறினாள். இந்த மாப்பிள்ளைதான் என்ன தவம் செய்திருக்க வேண்டும்? எவ்வளவு மகிழ்ச்சி அவனுடையது! ஆயிரம் முட்கள் அந்தப் பேயைக் குத்தின. அதனுடைய இதயத்திலே நெருப்புப் பற்றி எரிந்தது. பிரிவு என்கிற இந்த நெருப்பிலே வாழ்வதோ, சாவதோ இனிச் சாத்தியமில்லை. வாழ்ந்துகொண்டு இந்த எரிவை எப்படிச் சகிப்பது? ஆனால் செத்துப் போனாலோ இந்த எரிவையுங்கூட இழந்து விடுவேன். இத்தகைய சங்கடம் பேய்க்கு முன்பு ஒருபோதும் தெரியாத ஒன்று. மாட்டுவண்டி அவனுடைய பார்வைக்கு அப்பாலே போனபோது அவன் நினைவிழந்து போனான்.

வண்டிக்குள்ளே மாப்பிள்ளையும் பெரிய சங்கடத்தில் மாட்டிக்கொண்டிருந்தான். இரண்டு மணித்தியாலமாக அவன் போட்டுக்கொண்டிருந்த கல்யாணக் கணக்குகள் இன்னும் சரிவரவில்லை. அவனுடைய தகப்பனுக்கு கெட்ட கோபம் வரும். செலவு கொஞ்சம் கூடியிருந்தது. இந்த மாதிரிப் பிழைகளை அவனுடைய தகப்பன் சகிக்க மாட்டான்.

வியாபாரக் கணக்கு பார்ப்பதில் வரும் இன்பங்கள் உலகிலேயே பெரிய இன்பங்களாகும். மற்ற எல்லாம் பயனற்ற பிராக்குகள். அவை உண்மையான அர்த்தம் அற்றவை. பார்க்கப்போனால் கடவுளும் ஒரு சரியான கணக்குப்பிள்ளைதானே. நாங்கள் இழுக்கின்ற ஒவ்வொரு மூச்சும் அவருக்குத் தெரியும். ஒவ்வொரு நீர்த்துளியையும், காற்றின் சலனத்தையும், மண் துகளையும் அவர் செம்மையாய் பதிந்து வைத்திருக்கிறார். இயற்கையே தன்னுடைய கணக்கில் பிழைவிடாது இருக்கும் போது வியாபாரி தன் பேரேட்டில் பிழை வருவதை சும்மாய் விடமுடியாது.

முகத்தை இறுக்கிச் சுழித்து மாப்பிள்ளை கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தான். திரையை விலக்கி பெண் வெளியே பார்த்தாள். எதையும் அதிக நேரம் பார்க்க முடியாதபடி வெய்யில் உக்கிரமாகக் காய்ந்தது. பச்சைத் தோட்டங்களில் சிவப்புப் பழங்கள் ஒளிவீசின. அவற்றைப் பார்க்க எவ்வளவு ஆசையாக இருந்தது. அந்தப் பழங்களின் சிரிப்பிலே அவளுடைய கண்கள் மயங்கின. தன்னுடைய மாப்பிள்ளையின் கையைப் பிடித்து ஒரு குழந்தை கொஞ்சும் செல்லக் குரலில் அவள் சொன்னாள், ''இந்தப் பேரேட்டிலிருந்து உங்கள் கண்களை எடுத்து வெளியே ஒருக்கால் பாருங்களேன். அந்தப் பழங்கள் எவ்வளவு இனிமையாக இருக்கின்றன. இறங்கிப் போய் ஒருகை அள்ளிக்கொண்டு வாருங்கள். இந்த வெய்யிலில் அவை மேலும், மேலும் மினுங்குகின்றனவேயன்றி சிறிதும் வாடியதாய் தெரியவில்லை. வழமையாய் அதிக பிரகாசமான நிறங்கள் சூரிய வெளிச்சத்திலே வாடி தம்மை இழந்து விடுவதல்லவோ உண்மை!''

www.tamilarangam.net



இந்த மாப்பிள்ளையோ எங்கள் எல்லோரையும் போல ஒரு சாதாரண மனிதந்தான். பெரிய அழகனும் அல்ல. பெரிய குருபியும் அல்ல. தன்னுடைய இளமையின் உச்ச காலத்திலே அவனுக்குக் கல்யாணம் நடந்தது. ஆனாலும் இந்த நிகழ்ச்சியிலே அவன் தன்னை இழந்து போகவில்லை. இன்னும் ஐந்து வருஷத்துக்குப் பின்னர் இந்தக் கல்யாணம் நடந்திருந்தாலும் அது அவனுக்குச் சம்மதமாய் இருந்திருக்கும். இப்ப நடந்து விட்டது. அதில் அவனுக்குத் திருப்திதான். எப்பவோ ஒருநாள் நடக்கவேண்டிய நிகழ்ச்சிதான். சரி, ஒரு பெரிய வேலையை நிறைவேற்றி முடித்தாயிற்று. தன்னுடைய மனைவியின் நவரத்தின மாலையைத் தடவிக்கொண்டு அவன் சொன்னான், ''இந்தமாதிரிக் காட்டுப் பழங்களை பட்டிக்காட்டுச் சனம்தான் சாப்பிடும். நீ எப்படி இவற்றிலே ஆசைப்படலாம்? உனக்குப் பசியாயிருந்தால் நான் இந்தப் பொட்டணத்தைத் திறந்து அதிலே இருக்கிற அதிரசங்களையோ, தேங்காய்ப் பட்சணங்களையோ தருவேன். உனக்கு வேண்டியதை நீ சாப்பிடலாம்.

ஆனால் அந்த மணப்பெண்ணும் சரியான பட்டிக்காடு போலும். ஆஹா! எனக்கு அந்தப் பழங்கள்தான் வேண்டும். நான் உனக்கு நன்றி உடையவளாய் இருப்பேன். அப்படி உனக்குப் பஞ்சி என்றால் இறங்கிப்போய் அவற்றைப் பிடுங்க என்னை அனுமதி.

மாப்பிள்ளை திரும்பவும் சொன்னான். யார் இந்த முட்களிலே சிக்கிக் கொள்ள விரும்புவார்கள்? நாகரிகம் இல்லாத சனங்கள்தான் இப்படிக் காட்டுப் பழங்களைச் சாப்பிடவும் பிடுங்கவும் தேடிப் போகும். ஒரு மெதுவடையை அல்லது மைசூர்ப்பாகை எடுத்துத்தின்னேன். இனி வீட்டுக்குப் போனபிறகும் இந்தமாதிரிக் காட்டுப்பழமும் இலுமிச்சையும் கடிக்கப்போகிறேன் என்றெல்லாம் கதைக்காதே – சனம் எல்லாம் உன்னைப் பார்த்துச் சிரிக்கும்.

சிரிப்பவர்கள் சிரிக்கட்டும். எனக்குப் பரவாயில்லை என்று சொல்லிக்கொண்டே அவள் வண்டியிலிருந்து பாய்ந்து இறங்கினாள். தேன்சிட்டைபோல வயல்களினூடே ஓடிப்போய் தன்னுடைய மேலாக்கு முழுவதிலும் பழங்களை நிரப்பிக்கொண்டு மீண்டாள். சட்டியொன்றிலே அவற்றைக் கழுவிக் குளிர்வித்துத் தின்றபோது அவளுடைய வாயும் பழங்களும் ஒரே நிறமாயின. செட்டிப்பையனுக்கு இரண்டுமே பிடிக்கவில்லை. அவள் பலமுறை ஆசைகாட்டியபோதும் அவன் அந்தப் பழங்களைத் தொட மறுத்துவிட்டான்.



www.tamilarangam.net



''உனக்கு வேண்டாமென்றால்ச் சரி. ஒவ்வொருவருக்கும் தன்தன் விருப்பம். நான் என்றால் இந்தப் பழங்களுக்கு விலையாக என்னுடைய நவரத்தினமாலையைக் கேட்டாலும் அந்த வயலுக்குள் விட்டிட்டு வந்திருப்பேன்'' என்றாள் மணப்பெண்.

இதைக் கேட்ட மணமகன் நிமிர்ந்து பார்த்தான். இப்படிப் பேய்க்கதை இனிமேல் கதைக்கக்கூடாது. இதைக் கேட்டால் என்னுடைய அப்பனுக்குக் கெட்டகோபம் வரும். பெண்களின் அழகைவிட நற்குணங்களே முக்கியமானவை என்பது அவருடைய கொள்கை.

புன்சிரிப்புடன் மணப்பெண் சொன்னாள்: ''உங்களுடைய அப்பாவிடம் உள்ள பயத்தினால்தான் நீங்கள் இப்படிக் கணக்குப் புத்தகத்தைக் கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. ஒவ்வொன்றுக்கும் காலமும் இடமும் இருக்கின்றது. கல்யாண வீட்டிலும் மாப்பிள்ளை கணக்குப் புத்தகத்தில் அமிழ்ந்து போகலாமா?''

கல்யாணம் நடக்க வேண்டியபடியால் நடந்தது. ஆனால் கணக்கோ இன்னும் தெளிவாகவில்லை. முதலாம் திகதிக்கு முன்னம் நான் கணக்கைச் சரிபண்ணவேண்டும். ஏனென்றால் அன்றைக்கு நான் வியாபார நிமித்தமாக வெளிநாட்டுக்குப் பயணமாக வேண்டும். இந்த முதலாம் திகதி போகாவிட்டால் இதுபோல் நல்ல முகூர்த்தம் இன்னும் ஏழு வருசத்திற்கு வராதாம்.

முதலாந்திகதி வருகிற உத்தமமான முகூர்த்தத்தின் சிறப்பு பெண்ணின் மனத்தை மகிழ்விக்கவில்லை. அவள் ஆசைப்பட்டுப் பிடுங்கிய பழங்களிலும் அவளுக்கு மனமில்லாமற் போயிற்று. இதயத்தைப் பிழிந்து இரத்தம் எல்லாத்தையும் யாரோ எடுப்பது போல அவளுக்குத் தோன்றிற்று. இப்படியும் நடக்குமா? இதற்கு என்ன அர்த்தம்? அவளால் தனது காதுகளை நம்பமுடியவில்லை. என்ன சொன்னீர்கள்? வியாபரத்திற்காக வெளிநாட்டுக்குப் பயணம் போகிறீர்களா? சொல்லமுடியாத அளவுக்கு திரவியம் உங்கள் வீடெல்லாம் குவித்து வைத்திருக்கு என்று ஊரெல்லாம் சொல்கிறதே?

மாப்பிள்ளை பெருமிதத்தோடு சொன்னான் – அதிலே சந்தேகம் இல்லை. உன்னுடைய கண்களாலேயே நீ பார்க்கலாம் – வைரமும் முத்தும் குவிந்து கிடக்கிறது. ஆனால் செல்வத்தைப் பெருக்குவதை, பகலில் இரண்டு மடங்காகவும், இரவில் நான்கு மடங்காகவும் பெருக்குவதை, நிறுத்தக்கூடாது. வணிகளின் முதற் கடமை வியாபாரமே. எங்களுடைய செல்வத்தைப் பெருக்குதல் வேண்டும். ஆகவே இது போன்ற முகூர்த்தத்தைப் பயன்படுத்தாமல் விடேலாது.

மணப்பெண் வாயை இறுக்கி மூடிக்கொண்டாள். பேசித்தான் என்ன பயன்! பிடுங்கிய பழங்களை ஒவ்வொன்றாய் வெளியே எறிந்தாள். மாப்பிள்ளை சிரித்தபடி சொன்னான் – நான் சொன்னேன்தானே

www.tamilarangam.net



உனக்கு இது பட்டிக்காடுகள் சாப்பிடுகிற பழம் என்று. எங்களைப் போன்ற பெரிய குடும்பத்து ஆட்கள் இவற்றைச் சாப்பிடுவதில்லை. கடைசியாய் நீ எல்லாவற்றையும் எறியத்தானே வேண்டியிருந்தது. வீணாய்த்தான் அந்த வெயிலுக்குள் ஓடினாய்.

வண்டிக்கு வெளியே கழுத்தை நீட்டி மாப்பிள்ளை வெய்யில் எப்படி என்று பார்த்தான். கண்ணைச் சுடுகிறமாதிரித் தகித்தது. முட்புதர்களிலே மஞ்சட் பூக்கள் தீநாக்குகள் போல அவனுக்குத் தெரிந்தன. அடுத்து, இந்தமுள்ளுப் பூவெல்லாம் வேண்டும் என்று கேட்கமாட்டாய்தானே. இவற்றைச் சாப்பிடலாம் என்றால் மாடு மேய்க்கிறவன்கள் விட்டுவைத்திருக்க மாட்டார்கள்.

மணப்பெண் பதில் சொல்லவில்லை. தலையைக் குனிந்து பேசாமல் இருந்தாள். இந்தப் புருஷனுக்காகவா தாயையும் அப்பாவையும் வீட்டையும் விட்டு வந்திருக்கிறாள்? எத்தனை இன்பங்களை – தனது நண்பியர்களை, சகோதரர்களை, மச்சான் மச்சாள்மாரை, ஏரிக்கரையை, பாட்டையும் விளையாட்டையும், பாவைகளையும், கண்ணாமூச்சியையும் – எல்லாத்தையும் விட்டு இவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறாள். தன்னுடைய தாயை விட்டுவிட்டு ஒரு அந்நிய வீட்டுக்கு அவள் வந்திருக்கிறாள். அவனோ இதோ முதலாம் திகதி முகூர்த்தத்தில் பணம்பண்ண வெளிநாட்டுக்குப் புறப்படப் போகிறானாம்.

இவனுக்குப் பின்னாலே வந்த போது என்ன சந்தோசத்தை நினைத்துக் கொண்டு அவள் வந்தாள்? ஊரார் வீட்டிலே இருக்க ஒப்புக்கொண்ட போது என்ன இன்பத்தையும் திருப்தியையும் தேடி அவள் வந்தாள்? உழைப்பையும் உடைமைகளையும் திரவியத்தையும் ஒருவன் அனுபவிப்பது எப்போது? உண்மையான மகிழ்ச்சி இல்லாதபோது திரிலோகங்களிலும் சொத்து இருந்தும் என்ன பயன்? உலகத்துச் செல்வமெல்லாம் சேர்ந்தும் இழந்த ஒரு கணத்தையேனும் திருப்பிக் கொண்டுவர முடியாது. திரவியத்துக்காக மனிதர்கள் வாழ்கிறார்களா அல்லது மனிதர்களுக்காகத் திரவியம் இருக்கிறதா? இதல்லவோ நாம் எல்லோரும் பார்க்கவேண்டிய கணக்கு – இந்தக் கணக்கைப் புரிந்து கொண்டால் வேறு கணக்கு எதுவும் பார்க்க வேண்டியதில்லை.

(தொடரும்)



ஜனநாயகம் என்பது தனிப்பட்ட
ஒவ்வொருவரும் மற்றவரை
மதிக்க வேண்டும் என்பதே...
தனிப்பட்ட நபரை தெய்வமாக்குவதல்ல.

— ஆல்பர்ட் இன்ஸ்டின்.

www.tamilarangam.net



# சிட்னி கடிதம்

சிட்னி குருவி

பெரும் ஆரவாரத்துடன் அரங்கேறிய இலக்கிய பவரின் 'ஈடு' எதிர்பார்த்து வந்தவர்களை ஏமாற்றிவிட்டது. ஏற்கனவே மேடையேறிய நாடகத்தின் முற்பகுதியில் கூட ஒலி, ஒளி குறைபாடுகள், நெறிப்படுத்தாத அசட்டையான நடிப்புகள் அப்பட்டமாகவே வெளிப்பட்டன. பிற்பகுதி சொல்லவே தேவையில்லை. எந்தவித இயக்கமுமில்லாமல் வசனங்களை ஒழுங்காக ஒப்புவித்தலே போதும் என்ற போக்கே எல்லா நடிகர்களிலும் தெரிந்தது. இருக்கின்ற அரைகுறை ஒளியைக் கூட சரியாக பயன்படுத்த அவர்களால் முடியவில்லை. ஒலி வாங்கிகள் தமது இருப்பை இடைக்கிடை இரைந்து காட்டிக்கொண்டிருந்தன. பாட்டுக்காரர்கள், வாத்தியக்காரர்கள், நடிகர்கள் எல்லோரும் பாட்டுகளை மாறி மாறி துரத்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

நாடகம் என்ற பெயரில் எல்லோரும் ஏதோதோ பண்ணிக் கொண்டிருந்த சிட்னியில் நாடக கலை பற்றிய பிரக்ஞை உள்ளவர்களால் ஒரு புதிய வரவு கிடைக்கும் என்று நம்பியவர்களுக்கு ஏமாற்றம்தான். தமிழ் கலை இலக்கிய உலகை செழுமைப்படுத்த வல்ல படைப்புகளை பவரினால் கொடுக்கமுடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாடகவடிவம் பற்றிய அக்கறை கொண்ட இவர்கள் தயாரிப்பு, நிர்வாகம், தொழில்நுட்பம் பற்றி கவனமெடுக்காவிட்டால் எல்லாம் விழலுக்கிறைத்த நீர்தான். முதல்முறை என்பதால் பொறுத்து எதிர்காலத்தில் நல்லன கிடைக்கும் என்று நம்புவோமாக.

என்ன இருந்தாலும் நிதி உதவி என்ற சாட்டுகள் எதுவும் இல்லாமல் நாடகத்துக் கென்றே காசு கொடுத்து தமிழர்கள் வந்தார்கள் என்பது இலக்கிய பவரின் சாதனைதான்.

ETA இன் முதலாவது மாவீரர் தினமும் தமிழ் கத்தோலிக்க சங்கத்தின் இரண்டாவது நத்தார் ஒளிவிழாவும் இலவசமாக நடைபெற்றது. ஒலிவாங்கிகள் இங்கும் தமது திருவிளையாடல்களைச் செய்யத் தவறவில்லை. தற்காலமாக மேடைகளில் அரங்க நிகழ்வுக்குரிய ஒலி அமைப்பு செய்வது சிட்னியில் சாத்தியமே இல்லையா? இலங்கை இந்தியாவில் உள்ள வசதிகள் இங்கு கிடையாதோ? முயற்சி, பணம் கலை எல்லாம் இன்னும் எவ்வளவு காலத்திற்கு ஒலிவாங்கிக்கு பலியாகிக்கொண்டிருக்கும்?.

*

www.tamilarangam.net



# தமிழர் நோக்கில் பண்பாடும் மொழியும்

இ. அண்ணாமலை

தமிழ்ப் பண்பாடு பெருமையாகச் சொல்லிக்கொள்ளப்படும் ஒன்று. தமிழர்களுக்கே உரிய பண்புகள் சில உண்டு என்பதும் அவை தமிழர்களைத் தனிப்படுத்திக் காட்டுவன, சிறப்பித்துக் காட்டுவன என்பதும் தமிழ் சார்ந்த அறிவு ஜீவிகளிடம் பரவலாகக் காணப்படும் நம்பிக்கை. தமிழர்களைத் தனிப்படுத்திக் காட்டுவதில் முதன்மையானது மொழி என்பதில் ஐயமில்லை. மொழி பண்பாட்டின் அடிப்படையான அம்சம்; பண்பாட்டை வெளிப்படுத்தும் சாதனம். தனிப்படுத்திக் காட்டும் மற்றப் பண்பாட்டுக் கூறுகள் எவை என்று நிறுவுவது எளிதானது அல்ல. அந்தப் பண்பாட்டுக் கூறுகள் மற்ற சமூகத்தினரிடம் இல்லாதவையாக இருக்க வேண்டும்; தமிழ்ச் சமூகத்தின் எல்லாப் பிரிவினரிடையேயும் இருப்பவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவற்றைத் தமிழருக்கே உரிய பண்பாட்டுக் கூறுகளாக சொல்ல முடியும்.

இந்த இரண்டு அடிகோல்களின் அடிப்படையில் புறநோக்கில் (Objectively) தனித்தன்மையை கணிப்பது கடினமானது. தமிழ்ப் பண்பாடு என்று தமிழர்கள் சொல்லும் போது அவர்கள் அகநோக்கில் தங்களைப் பற்றி மானசீகப் படுத்திக் கொள்வதையே (Perception) குறிக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் அதுதான் உண்மையானது. இவ்வாறு மானசீகப் படுத்திக் கொள்வது பெரும்பாலும் அறுவு ஜீவிகளால் செய்யப்பட்டுப் பொதுமக்களுக்குப் பரவும்......

www.tamilarangam.net



தங்கள் பண்புக் கூறுகள் சிறந்தவை என்பதும் ஒருவகை வாழ்க்கை மதிப்பீட்டின் அடிப்படையில் கூறுவதுதான். மதிப்பீடு இல்லாத நிலையில் பண்புகளில் ஏற்றத்தாழ்வு இல்லை.

கற்பு என்ற பண்பை எடுத்துக் கொள்வோம். தமிழ்க் கற்பு என்பது உயர்ந்த பண்பாகப் போற்றப்படும் ஒன்று. பொதுநிலையில் கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பால் ஒழுக்க உறவை வரையறுக்கும் ஒரு பண்பு. எந்தச் சமூகத்திலும் அதன் கட்டுக்கோப்பைக் காக்கவும், அதன் சுய வளர்ச்சியை உறுதி செய்யவும் அவசியமாக இருக்கும் பண்பு. இந்தப் பண்பு ஒவ்வொரு சமூகத்திலும் அதன் தேவைக்கு ஏற்றபடி ஒவ்வொருவிதமாக இருக்கலாம். ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்குப் பலர் போன்ற பலவும் வெவ்வேறு சமூகங்களில் வழங்குகின்ற, அந்தந்தச் சமூகங்களுக்குத் தேவையான கற்பு நெறிகள்தான்.

ஒருத்திக்கு ஒருவன் என்ற கற்பு நிலையே தமிழ்ப் பண்பாடாகப் பேசப்படுகிறது. ஏக பத்தினி விரதன், பிறன்மனை நோக்காப் பேராண்மை என்று ஆண் நிலையிலும் கற்பு பேசப்பட்டாலும் கற்பு, பெண்ணின் ஒழுக்க நெறியாகவே நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. மழை வருவித்தல், ஊரை எரித்தல் போன்ற இயற்கை விதிகளை மீறும் ஆற்றலைப் பெண்ணின் கற்புக்குக் கொடுத்திருப்பதைப் போல ஆணின் கற்புக்குத் தனி ஆற்றல் எதுவும் கொடுக்காதது இதை வெளிப்படுத்தும். எனவே கற்பு என்பதற்குத் தமிழ்ப் பண்பாட்டில் தனி அர்த்தம் கொடுக்கப்படுகிறது. அது பெண்ணின் பால் ஒழுக்க நெறியை வரையறுக்கும் பண்பாகவே கொள்ளப்படுகிறது.

மனத்தாலும் மற்ற ஆணை நினைக்கக்கூடாது என்று பெண் கற்பை வலியுறுத்தும் தமிழ்ச் சமூகத்தில்தான் திரைப்படக் கதாநாயகனை மனத்தால் கூடும் 'சினிமாவுக்குப் போன சித்தாளு'வும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதேபோல் பெண்ணைத் தெய்வமாகப் போற்றுவது தமிழ்ப் பண்பு என்று சிறப்பித்துக் கூறிக்கொள்ளும் தமிழ்ச் சமூகத்தில்தான் பெண்குழந்தைகள் பிறந்தவுடன் கொன்றுவிடுகிற பிரிவினரும் இருக்கிறார்கள். எனவே தமிழ்ப் பண்புகள் என்று போற்றப்படுபவை நடைமுறையில் இல்லாவிட்டாலும் மானசீகப்படுத்திக் கொண்ட பண்புகளே....

தமிழ்ச் சமூகத்தை இந்த நோக்கில் பார்த்து அதன் தனிப் பண்புகளை – அதாவது வாழ்க்கையைப் பற்றிய அதன் தனி அர்த்தங்களை – நிறுவும்போதுதான் விளக்க நிலையில் தமிழ்ப் பண்பாட்டின் தனித் தன்மையைப் பற்றிப் பேச முடியும். விளக்க நிலையில் பண்பாடுகளுக்கிடையே – அர்த்தப் படுத்திக் கொண்ட வாழ்க்கைகளுக்கிடையே – உயர்வு தாழ்வு இல்லை. இந்த நோக்கில் அமெரிக்கப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு என்ற இரண்டில் எது உயர்ந்தது என்ற கேள்வி அர்த்தமில்லாதது. இதைப் போலவே தமிழ்

www.tamilarangam.net



சமூகத்தின் சங்ககால பண்பாட்டையும் இக்காலப் பண்பாட்டையும் ஒப்பிட்டு உயர்வு தாழ்வு காண்பதும் தவறானது. ஒரு சமூகத்தினுடைய, ஒரு காலத்தினுடைய பண்பாட்டின் அடிப்படையில் இன்னொரு சமூகத்தினுடைய, இன்னொரு காலத்தினுடைய பண்பாட்டை எடைபோடுவது தவறாகும். ஒவ்வொரு சமூகமும் தன்னைக் காத்துக் கொள்ளும் வகையில் தன் சமகால வாழ்க்கையை அர்த்தப் படுத்திக் கொள்கிறது. இது பரிணாம நீதி. எனவேதான் பண்பாட்டு மாற்றம் இருக்கிறதே தவிர பண்பாட்டு அழிவு இல்லை என்கிறோம். ஒரு சமூகத்தினர் முற்றிலுமாக அழியும்போது, ஒரு சமூகத்தினர் தங்கள் பண்பாட்டை விட்டுவிட்டு இன்னொரு சமூகத்தினரின் பண்பாட்டை முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளும்போது பண்பாட்டு அழிவு நேரலாம். ஆனால் இது அபூர்வம். மொழிக்கும் இது பொருந்தும்.

வாழ்க்கையின் அர்த்தம் – பண்பாடு – நிலையானது அல்ல. அது காலந்தோறும் மாறும். மாற்றம் தவிர்க்க முடியாதது. ஏனென்றால் மனிதனைச் சுற்றி இருப்பவை மாறுகின்றன. அந்த மாறுதல்களோடு தன்னை இணைத்து வாழ்க்கையைப் புரிந்து கொள்வதும் மாறுகிறது. தமிழ்ப் பண்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளாக மாறவில்லை என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது. நடக்க முடியாதது. அதே நேரத்தில் வெளிவடிவம் மாறினாலும் அடிப்படை தன்மை மாறாமல் இருக்கும் பண்புகளும் பண்பாட்டில் உண்டு. ஆழ்நிலையில் இருக்கும் அவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த இரண்டின் அடிப்படையிலும் இன்றைய தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு என்ன என்ற கேள்விக்கு விடைகாண முயல வேண்டும். சங்ககால மரபுப் பண்பாடே இன்றைய தமிழ்ப் பண்பாடு என்பதும், ஏற்றுக்கொண்ட மேலநாட்டின் புதிய பண்பாடே இன்றைய தமிழ்ப் பண்பாடு என்பது விடையாகாது. இரண்டின் ஊடாட்டத்தில் விளைந்த ஒன்றே இன்றைய தமிழ் பண்பாடாக இருக்க முடியும்.

பண்பாட்டின் அடிப்படை அம்சமான மொழியைப் பற்றிய தமிழர்களின் கருத்துகளும் மேலே சொன்ன பிற பண்பாட்டுக் கூறுகளைப் பற்றிய அவர்களது கருத்துக்களைப் போன்றவையே. அவர்களுடைய மொழி நோக்கு, மொழியின் நடைமுறை வழக்கின் அடிப்படையில், விளக்க நிலையில் அமையாமல் மானசீகப்படுத்தப்பட்ட ஆதர்ச நிலையில், விதி நிலையில் அமைந்திருக்கிறது. அமைப்பில் தமிழ்மொழி தனித் தன்மை உடையது, மற்ற மொழிகளைவிடச் சிறந்தது, இரண்டாயிரம் ஆண்டுகளாக மாறாதது என்ற கருத்து தமிழ் சார்ந்த அறிவு ஜீவிகளிலால் போற்றப்படுகிறது.

ஒவ்வொரு சமூகமும் அதன் பண்பாட்டின் அடிப்படையில் சில சாதனைகள் புரிகிறது. வெவ்வேறு பண்பாடுகள் வெவ்வேறு சாதனைகள் புரியலாம். பண்பாட்டின் சாதனைகளையே நாகரிகம் என்கிறோம். சாதனைகளில் உயர்வு, தாழ்வு உண்டு; வாழ்வு தாழ்வும் உண்டு. எனவே ஒரு நாகரிகம் சிறந்த நாகரிகம் என்றோ அழிந்த நாகரிகம் என்றோ சொல்லலாம். ஒரு சமூகம் தன் பண்பாட்டின்

www.tamilarangam.net



விளைவாக எழுத்தையோ வெடிமருந்தையோ கண்டுபிடித்து அதன் மூலம் அதிகார பலம் பெற்று உயர்ந்த நாகரிகம் என்று பெயர் பெறலாம். வேறு சாதனைகளால் அதைவிட அதிகார பலம்பெற்ற இன்னொரு நாகரிகத்தால் வெல்லப்பட்டு அழிந்த நாகரிகம் என்றும் பெயர் பெறலாம். பண்பாட்டிற்கு உயர்வோ அழிவோ இல்லை; நாகரிகத்துக்கு உண்டு. ஒருவன் பண்பாட்டை உயர்ந்தது, தாழ்ந்தது என்று வகைப்படுத்தினால் அது நாகரிகத்தை வகைப்படுத்துவதாகவே அமையும்.

தமிழ்ப் பண்பாடு கட்டடக் கலை, நுண்கலை, நீர்ப்பாசனம், கடல் வணிகம் முதலியவற்றில் முன்காலத்தில் படைத்த சாதனைகளைத் தமிழ் நாகரிகம் எனலாம். தமிழ் மொழி இலக்கியம், இலக்கணம், ஓரளவு தத்துவம் ஆகியவற்றில் படைத்த சாதனைகளும் தமிழ் நாகரிகத்தில் அடங்கும். இருபண்பாடுகளின் ஊடாட்டத்தால் புதிய சாதனைகள் – நாகரிகங்கள் – பிறப்பதை உலக வரலாறு காட்டுகிறது. மேலே சொன்ன மொழித்துறைகளில் முக்கியமாக இலக்கணத்திலும், தத்துவத்திலும், பாலி பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய வட மொழிகளின் ஊடாட்டம் தமிழ் மொழிக்குக் கிடைத்தது.

தமிழ் நாகரிகம் உயர்ந்த நாகரிகம் என்று நாம் பெருமைப்படலாம். இது தமிழ் முன்னோர்களின் பெருமை. நம் பெருமை, இதற்கு நாம் வாரிசு என்பதே. இன்றைய தமிழ்ப் பண்பாட்டின், தமிழ் மொழியின் சாதனை என்ன என்ற கேள்விக்கு விடை இல்லை. கலை, அறிவியல், இலக்கியம் முதலியவற்றில் இன்றைய தமிழ்ப் பண்பாட்டின், தமிழ் மொழியின் தனிப்பட்ட சாதனைகள், சிறப்பான சாதனைகள் என்று பெருமைப்பட எதுவும் இல்லை. ஆங்கிலப் பண்பாட்டின், மொழியின் ஊடாட்டம் தமிழ்ப் பண்பாட்டுக்கு, மொழிக்கு இன்று இருக்கிறது. ஆனால் இதன் விளைவாகப் புதிய சாதனைகள் எழக்காணோம். செய்தவை எல்லாம் ஆங்கிலப் பண்பாட்டினுடைய, மொழியினுடைய சாதனைகளின் நிழலாகத்தான் இருக்கின்றன. இப்படித் தமிழ் நாகரிகம் ஒடுங்கிவிட்டதற்குத் தமிழ்ப் பண்பாட்டில் ஏதாவது காரணம் இருக்கிறதா என்று பார்க்கலாம்.

பண்பாட்டைப் பற்றியும் பண்பாட்டின் சாதனமான மொழியைப் பற்றியும் தமிழர்கள் கொண்டிருக்கிற மனப்பாங்கும் கருத்துகளும் ஒரு காரணம் ஆகலாமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. மேலே சொன்னபடி, இரண்டைப் பற்றிய தமிழர்களின் மனப்பாங்கும் கருத்துகளும் ஒரேமாதிரியானவை. தமிழ்ப் பண்பாடு தூய்மையானது. இந்தத் தூய்மையைப் போற்ற வேண்டும் என்ற எண்ணமும் அந்த எண்ணத்தின் விளைவான செயல்களும் மொழிக்கும் ஏற்றப்படுகின்றன. தமிழ் மொழியின் கன்னித்தன்மை – இளமை – தூய்மை என்ற இரண்டு பொருளிலும் – வலியுறுத்தப் படுகிறது. கன்னித்தன்மையைக் காக்க சுதந்திரமான வளர்ச்சிக்குக் கட்டுப்பாடுகள் போடப்படுகின்றன. தமிழ் நாகரிகம் உயர்ந்திருந்த காலத்தில் இருந்ததுபோல் இன்றும் தமிழ் வீட்டு மொழியிலிருந்து நாட்டு மொழி ஆகவேண்டுமென்றால் கட்டுப்பாடுகள் துணை செய்யாது...

www.tamilarangam.net



பழைய மரபை மேற்கோள் காட்டி நெறிப்படுத்தும் பண்புகளுக்கும் இன்றைய வாழ்க்கையின் நிர்ப்பந்தங்களுக்கு ஏற்ப நடைமுறையில் கடைப்பிடிக்கும் பண்புகளுக்கும் இடையே இடைவெளி இருப்பதைபோல, மரபு இலக்கணங்களிலிருந்து மேற்கோள் காட்டி நெறிப்படுத்த முனையும் தமிழ் மொழிக்கும் இன்றைய தேவைகளை நிறைவு செய்யத் தேவையான தமிழ் மொழிக்கும் இடைவெளி இருக்கிறது. போற்றுவது ஒன்றும் பின்பற்றுவது ஒன்றுமாகப் பிற பண்பாட்டுக் கூறிகளில் இரட்டை நடத்தை இருப்பது போல மொழியிலும் போற்றுவது தமிழ், பின்பற்றுவது ஆங்கிலம் என்ற நிலை இருக்கிறது. இந்த இரட்டை நடைத்தையால் கலை, அறிவியல், இலக்கியம் ஆகிய எல்லாத் துறைகளிலும் படைப்பாற்றல் முழுவளர்ச்சி அடையவில்லை.

நம் ஆழ்மையை உருப்படுத்தும் நம் பண்பாட்டை, மொழியைச் சார்ந்து சாதனைகள் செய்ய மனம் இல்லை; வாய்ப்பு இல்லை. நாம் முழுமையாகத் தன்வயப்படுத்திக் கொள்ளாத இன்னொரு பண்பாட்டை, மொழியைச் சார்ந்து சாதனைகள் செய்ய இயலவில்லை. மீறிச் சிலர் செய்கின்ற சாதனைகளைப் பிறப்பால் தமிழர்களின் சாதனைகள் என்லாமே தவிர தமிழ்ப் பண்பாட்டின், மொழியின் சாதனைகள் என்று கூற முடியாது.

*தமிழ்ப் பண்பாட்டிடம் தமிழர்களுக்கு ஒரு பக்தி இருப்பதுபோல், தமிழ் மொழியிடமும் ஒரு பக்தி இருக்கிறது. தமிழைத் தாயாக, தெய்வமாகக் கொள்வதன் விளைவு இது. பக்தி இன்னொரு படி போய்ப் பயபக்தி ஆகிறது. பயபக்தி மொழியை நம்மிடமிருந்து தூரப்படுத்துகிறது. மேலே சொன்னபடி மரபின் அடிப்படையில் மொழிக்கு விதிக்கும் கட்டுப்பாடுகள் தூரப்படுத்துதலை உறுதி செய்கின்றன. மொழிக்கு நாம் வணங்குவதை விட மொழியை நமக்கு வளைக்க வேண்டும். மொழியைத் தூரத்தில் வைக்காமல் நெருக்கம் காட்ட வேண்டும். மொழியோடு தோழமை உறவுகொண்டு ஊடியும் கூடியும் அதனுள் ஆட்சி செலுத்தினாலே புதிய மொழி பிறக்கும். புதிய படைப்புகள் பிறக்கும். கலை, அறிவியல், இலக்கியப் படைப்புகளில் புதிய சாதனைகள் படைக்க மொழியிடம் உரிமை எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ்ப் பண்பாட்டின், மொழியின் விளைவாக புதிய சாதனைகள் படைக்கும் போதுதான் புதிய தமிழ் நாகரிகம் பற்றிப் பேசலாம். அதைப் பற்றிப் பெருமைப்படலாம்.*

***

நன்றி: காலச்சுவடு
**1991** சிறப்பிதழ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net





# 'கவிக்குயில் பாரதியார்'

– பாரதி பிரியா

பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்த கவிஞன் என பாரதியை அழைக்கின்றோம்.

'மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என தர்மாவேசம் கொண்ட பாரதியை – அவரது அன்புமகள் தங்கம்மாள் எதிர்த்துப் பேசிய சுவாரஸ்சியமான சம்பவம் ஒன்றை பாரதியின் நெருங்கிய தோழர் சுத்தானந்த பரதியார் மிகவும் நயமாக எழுதுகிறார்.

பாரதி கஞ்சா புகைக்கும் பழக்கத்திற்கு அடிமையானவர். கஞ்சா அவருக்கு வழங்கிய பரிசு – அவர் கால் பாதங்களில் ஆணி (சதை) வளர்ந்தது. காலைக் கெந்திக் கெந்தி நடப்பாராம்.

அதி உன்னதமான கவிமழை பொழிந்த பாரதியின் மறுபக்கம் சோகமானது. இன்னல்கள் நிறைந்தது.

'கவிக்குயில் பாரதியார்' என்ற நூலில் பாரதியின் வாழ்க்கைச் சம்பவங்களை இலக்கிய நயமுடன் விபரிக்கின்றார் சுத்தானந்த பாரதி.

''ஒரு மதியம் சாப்பிடச் சென்றோம். அப்பாத்துரை வீட்டில் சமபந்தி நடக்கவில்லை. நெல்லையப்பர் வெளியில் உட்காந்தார். அப்பாத்துரை மாமியார் வைதீகம். அவரைக் கண்டால் பாரதியார் அடங்கிப்போவார். நாங்கள் சாப்பிட்ட பிறகே பவலிக்கு (நெல்லையப்பர்) இலை போட்டார்கள். பாரதியார் வெற்றிலைப் பெட்டியைக் காலி பண்ணினார். நான் முதலில் இருப்பிடம் சென்றேன். அங்கே தங்கம் (பாரதியார் மகள் தங்கம்மாள்) என்னை வரவேற்றாள். ஆர்மோனியம் சுருதி கூட்டிப் பாடினாள்.

அதற்குள் பாரதியார் வந்துவிட்டார். உடனே ''அது கொண்டா'' என்றார். மனைவி மக்கள் ''வேண்டாம்'' என்று தடுத்தனர்.

தங்கம் அவர்முன் நகர்ந்து சென்று, ''கஞ்சா அவினியுடன் கள்ளுண்டு

www.tamilarangam.net



வாடாமல், பஞ்சாமிர்தம் பருகுவது எக்காலாம்?'' என்று பாடி, ''அப்பா அது வேண்டாம் எங்கிறார் சித்தர்'' என்றாள்.

பாரதி:— அவன் துறவி சொன்னான்; நான் துறவியா? எனக்கு வேண்டும்.

தங்கம்:— இல்லறத்திலிருந்து துறவறத்துக்குப் போக வேண்டாமோ?

பாரதி:— எனக்கு வேண்டும்.

தங்கம்:— அன்று துறவு வேண்டும் என்றாயே!

பாரதி மனைவி செல்லம்மாள்:— அப்படிக் கேளம்மா!

(பாரதி அவளை அடிக்க எழுந்தார்).

தங்கம்:— இதுதானோ பெண் விடுதலை? இதுவா உன் விடுதலை; பெண்மை வாழ்கவெனப் பாடினாயே?

உடனே பாரதியார் திகைத்து நின்றார். சட்டென்று தங்கத்தின் காலைப் பிடித்து கொண்டு, ''நீ சொல்வதே சரி... உண்மை... என்னை மன்னிக்க வேண்டும். தேவீ.. ஓ பராசக்தி... ஓ பராசக்தி'' என்று ஏழெட்டுத்தரம் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.''

இவ்வாறு எழுதுகின்றார் சுத்தானந்த பாரதியார். பாரதியும் ஒரு மனிதன்தானே.

இதுபோன்ற பல உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு நூல்தான் 'கவிக்குயில் பாரதியார்'. வெளியிட்டோர்:— திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.


# கௌரி நாகராஜனின்

குச்சிப்புடி நாட்டிய நிகழ்ச்சி
பங்குனி மாதம் 21ம் திகதி மாலை 6.30 மணிக்கு
Phoenis Theatre, Victoria College,
Burwood Campus ல் நடைபெறவுள்ளது.
அனுமதி $10.00

www.tamilarangam.net



# சிங்களர் கதை

– எஸ்.பொ

## (2) விஜயவின் வருகை

வங்கர்களுடைய நாட்டிலே, வங்கத் தலைநகரிலே, முன்னொரு காலத்திலே, வஙகர்களுடைய அரசன் ஒருவன் வாழ்ந்தான். கலிங்கர்களுடைய அரசனின் மகளே அந்த அரசனுடைய மனைவியாவாள். இந்த மனைவி மூலம் அந்த அரசனுக்கு ஒருமகள் பிறந்தாள். அவள் மிருக ராஜனுடன் புணருவாள் என்று நிமித்தகர்கள் ஆருடஞ் சொன்னார்கள். அவள் மிகவும் அழகானவள்; அதி எளிதிற் காம வசப்படுபவள். அவளாலே ஏற்படக்கூடிய அவமானத்தை (நினைத்து) அரசனும் அரசியும் அவளைச் சகிக்க மாட்டாதவர்களாக இருந்தார்கள்.

சுயாதீன வாழ்க்கையின் இன்பங்களை நாடி, அவள் தன் வீட்டை விட்டுத் தனியாகப் புறப்பட்டாள். மற்றவர்களாலே அடையாளம் காணமுடியாத விதத்தில், மகத நாட்டுக்குப் பயணப்பட்ட வணிகர் கூட்டம் ஒன்றிலே அவள் இணைந்து கொண்டாள். லாலா நாட்டிலே, ஒரு காட்டிலே, அந்த வணிகர் கூட்டத்தைச் சிங்கம் ஒன்று தாக்கியது. ஏனைய மக்கள் அங்கும் இங்குமாக ஓடினார்கள். ஆனால், அவள் சிங்கம் வந்து கொண்டிருந்த அதே பாதையிலே ஓடினாள்.

www.tamilarangam.net



அந்தச் சிங்கம் தன் உணவை வேட்டையாடிய பின்னர், அந்த இடத்தை விட்டுப் புறப்படும் பொழுது, அவளைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்டது. [அஃது ஆண்சிங்கம்] அவள் மீதான காதல் அதனைப் பற்றிக் கொண்டது. செவிகள் பின்னோக்கி (சிலிர்க்க), தன் வாலை ஆட்டிக் கொண்டு அவளை நோக்கி வந்தது. அதனைக் கண்டதும், நிமித்தகர்களுடைய ஆருடம் பற்றி அவள் கேள்விப்பட்டிருந்ததை நினைவுபடுத்தி பயங்கொள்ளாதும் அதனுடைய அங்கங்களை ஆரத் தழுவி [சுகம் ஊட்டி] னாள்.

அவளுடைய தழுவலினால் உக்கிர காமவசப்பட்ட அச்சிங்கம், அவளைத் தன் முதுகிலே ஏற்றிச் சுமந்து கொண்டு, எல்லா விரைவினையும் இணைத்துத் தன் குகையை அடைந்தது. அங்கு அது [சிங்கம்] அவளைப் புணர்ந்தது. இந்தக் கலவியினால், உரிய காலத்தில், அந்த இளவரசி ஒரு மகனும் ஒருமகளும் அடங்கிய இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

மகனுடைய கைகளும் கால்களும் சிங்கத்தினுடையது போன்று அமைந்த காரணத்தினால், அவள் அவனுக்கு சீஹபாகு எனப் பெயரிட்டாள். ஆனால், மகளுக்கு சீஹசிவல்லி எனப் பெயரிட்டாள். மகன் பதினாறு வயதடைந்த பொழுது, தன்னுள் எழுந்த சந்தேகத்தைத் தாயிடம் கேட்டான். 'அன்புத் தாயே, நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? ஏன் எங்கள் தந்தை முற்றிலும் வேறுபட்டவராக இருக்கின்றார்?.' அவள் [நடந்த சமாசாரங்கள்] எல்லாவற்றையும் அவனுக்குச் சொன்னாள்.

பின்னர் அவன் கேட்டான்: 'நாம் ஏன் இங்கிருந்து போகக் கூடாது?'. 'உன் தந்தை இந்தக் குகையை ஒரு பாறையால் அடைத்து வைத்திருக்கிறார்' என அவள் பதிலளித்தாள். அப்பொழுது அந்தப் பெரிய குகைக்கு முன்னால் இருந்த அந்தத் தடையைத் தூக்கிக் கொண்டு ஐம்பது யோசனை தூரம் சென்றான். ஒரே நாளிற் சென்று திரும்பினான்.

பின்னர், சிங்கம் தன் உணவுக்காக வேட்டையாடச் சென்ற பொழுது, சீஹபாகு தன் தாயைத் தன் வலத் தோளிலும், தன் தங்கையைத் தன் இடத் தோளிலும் வைத்துக் கொண்டு அங்கிருந்து விரைவாகச் சென்றான். மரக் கிளைகளை ஆடையாக அணிந்து கொண்டு, அவர்கள் அவ்வாறே எல்லைக் கிராமத்தை அடைந்தாயர்கள்.

படையிலே ஒரு தளபதியாக இருந்த இளவரசியின் மாமன் மகனுக்கு, அந்த எல்லை நாட்டினை ஆளும் உரிமையை வங்க அரசன் அளித்திருந்தான். அப்பொழுது அவன் ஓர் ஆலமரத்தின் கிழ் அமர்ந்து, அங்கு நடைபெற்ற வேலையை மேற்பார்வை செய்து கொண்டிருந்தான்.

அவர்களைக் கண்டதும், அவர்கள் யாரென அவன் விசாரித்தான். 'நாங்கள் வனவாசிகள்' என்று அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு

www.tamilarangam.net



ஆடைகள் வழங்கும்படி தளது மக்களைத் தளபதி பணித்தான். அவை அற்புத ஆடைகளாக மாறின. அவர்களுக்கு அவன் இலைகளிலே உணவளித்திருந்தான். அவர்களுடைய மகிமையினால் அவை பொற்றட்டுகளாக மாறின. அப்பொழுது, ஆச்சரியமடைந்து, 'நீங்கள் யார்'? என்று தளபதி அவர்களைக் கேட்டான். இளவரசி அவனுக்குத் தன் குடும்பத்தையும் கோத்திரைத்தையும் கூறினாள். பின்னர், தளபதி தன் மாமன் மகளையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வங்கர்களுடைய தலைநகர் சென்று, அவளைத் திருமணஞ் செய்து கொண்டான்.

தன் குகைக்கு விரைவாகத் திரும்பிய பொழுது, மூன்று பேரையும் காணாத சிங்கம் வியாகூலமடைந்தது. தன் மகனை நினைத்துத் துக்கித்து, அது உணவையும், பானத்தையும் துறந்தது. தன் பிள்ளைகளைத் தேடிக் கொண்டு எல்லைக் கிராமத்துக்குச் சென்றது. அது சென்ற ஒவ்வொரு கிராமத்திலும், அங்கு வாழ்ந்த மக்கள் கிராமத்தைத் துறந்து வெளியேறினார்கள்.

எல்லைவாசிகள் அரசினிடம் வந்து சொன்னார்கள்: 'உன் நாட்டினை ஒரு சிங்கம் சீரழித்துக் கொண்டிருக்கின்றது. ஓ, அரசனே! இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுங்கள்'.

இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றைக்கூடிய யாரையும் அரசனாலே கண்டுபிடிக்க ஏலாதிருந்ததினால், ஆயிரம் (எண்ணிக்கையுள்ள பொற்) காசுகளை ஒரு யானையின் முதுகிலே வைப்பித்து, 'அந்தச் சிங்கத்தைக் கொண்டு வருபவன் அவற்றைப் பெறக் கடவன்' என்கிற அறிவித்தலுடன் நகரை வலம் வரச் செய்வித்தான். இதே பாணியில் மன்னன் இரண்டாயிரமும் மூவாயிரமும் அளிக்க முன்வந்தான். இரண்டு தடவைகள் சீஹபாகுவின் [கவித்துவத் தேவை கருதி இந்த இடத்திலே சீஹ புஜய என்கிற பெயர் கையாளைப்பட்டுள்ளது: இரண்டும் 'சிங்கக்கையன்' எனப் பொருள்படும்.] தாய் அவனை இரண்டு தடவைகள் தடுத்தாள். மூன்றாம் தடவை தாயின் அனுமதியைக் கேட்காமலே, தன் சொந்தத் தந்தையைக் கொல்லுவதற்குப் பரிசாக வழங்கப்பட்ட மூவாயிரம் பொற்காசுகளை சீஹபாகு எடுத்துக் கொண்டான்.

அவர்கள் அவனை மன்னனுடைய சமூகத்திற்குக் கொண்டு வந்தார்கள். அரசன் அவனைப் பார்த்து வருமாறு சொன்னான்: 'அந்தச் சிங்கத்தை நீ கொல்வாயானால், உடனேயே இந்த இராஜ்யத்தை நான் உனக்குத் தருவேன்'.

அவன் குகையின் வாசலுக்குச் சென்றான். தன் மகன்மீது கொண்ட பாசத்தினால் அவனை நோக்கி வந்து கொண்டிருந்த சிங்கத்தைத் தூரத்திலிருந்து பார்த்த அவன், அதனைக் கொல்லும் நோக்கத்துடன் ஓர் அம்பினை எய்தான்.

அந்த அம்பு சிங்கத்தின் நெற்றியைத் தாக்கியது. ஆனாலும் அது தன்

www.tamilarangam.net



மகன்மீது கொண்ட பாசத்தினால் இளைஞனின் காலடி மண்ணில் வீழ்ந்தது. அவ்வாறு அது மூன்று தடவைகள் வீழ்ந்தது. அதன் பின்னரே மிருகங்களின் ராஜனுக்குச் சினம் வந்தது. ஆனால், அவன் அதனை நோக்கிச் செலுத்திய அம்பு அதனைத் தாக்கி அதன் உடம்பைத் துளைத்தது.

சீஹபாகு சிங்கத்தின் தலையைப் பிடரி மயிருடன் சேர்த்து [வெட்டி எடுத்துக் கொண்டு] நகரத்துக்குத் திரும்பினான். அப்பொழுது வங்கர்களுடைய அரசன் இறந்து ஏழு நாள்களாகியிருந்தது. அரசனுக்கு ஒரு மகன்தானும் இல்லாததினாலும், அவனுடைய [இளைஞனின்] செயலால் மகிழ்வுற்ற அமைச்சர்கள் அவன் அரசனுடைய பேரன் என்பதைக் கேள்வியுற்று, தாயை அடையாளம் கண்டு, ஒன்று கூடி, ஒரு மனதாக, இளவரசன் சீஹபாகுவைப் பார்த்து 'நீங்கள் எங்களுடைய அரசனாகுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவன் அரச பதவியை ஏற்ற போதிலும், அதனைத் தன் தாயாரின் கணவனுக்குக் கையளித்துவிட்டு, சீஹசவல்லியையும் அழைத்துக் கொண்டு பிறந்த நாட்டுக்குத் திரும்பினான். அங்கு ஒரு நகரை நிர்மாணித்து, அதனைச் சீஹபுர என அழைத்து, அதனைச் சுற்றிலும் நூறு யோசனை தூரம் பரவியிருந்த காட்டிலே கிராமங்களும் அமைத்தான். அந்த லாலா நாட்டிலே [அமைக்கப்பட்ட] அந்த நகரிலே மனிதர்களுடைய அரசனான சீஹபாகு, சீஹசிவல்லியை ராணியாக்கி, புகழுடன் அரசாண்டான். கால ஓட்டத்திலே ராணியார் பதினாறு தடைவைகள் இரட்டைச் சூலுற்றாள். ஆக மூத்தவன் விஜய எனப் பெயரிடப்பட்டான். இரண்டாவது [மகன்] சுமித்த. மொத்தமாக முப்பத்திரண்டு மகன்கள். உரிய காலத்தில் விஜயவைப் பட்டத்து இளவரசனாய் அரசன் நிவேதித்தான்.

விஜய துர்நடத்தைக்காரன். அவனுடைய கூட்டாளிகளும் அவனைப் போலவே. தாங்கொண்ணாத வன்செயல்கள் அநேகமானவற்றை அவர்கள் செய்தார்கள். இதனாற் கோபமடைந்த மக்கள் விஷயத்தை மன்னனிடம் சொன்னார்கள். தன் மகனைக் குற்றஞ்சாட்டிய அரசன் மக்களைச் சமாதானப்படுத்தினான். ஆனால், முன்னரைப் போலவே, இரண்டாம் முறையும், மீண்டும் மூன்றாம் முறையும் [விஜயவும் கூட்டாளிகளும் வன்செயல்கள் செய்ததினால்] அவர்கள் எல்லோரும் குழம்பினார்கள். கோபாவேசப்பட்ட மக்கள், 'உங்கள் மகனைக் கொல்லுங்கள்' என்று அரசனிடம் கூறினார்கள்.

அப்பொழுதுதான் அரசன் விஜயவவையும் அவனுடைய கூட்டாளிகளான எழுநூறு பேரையும் [அவர்களுடைய] தலைகளின் மயிரைப் பேர்பாதி மழிக்கச் செய்வித்து [இதன் மூலம் அவர்கள் சுயாதீனமிழந்த அடிமைகள் என அடையாளமிட்டுப் பிரசித்தப்படுத்தி] அவர்களைக் கப்பலிலே போட்டுக் கடலிலே விடுவித்தான். அவர்களுடைய மனைவிமார்களும், குழந்தைகளும் அவ்வாறே விடுவிக்கப்பட்டார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வெவ்வேறாக அனுப்பப்பட்டு வெவ்வேறாகவே கரையடைந்தார்கள். ஒவ்வொரு கூட்டமும்

www.tamilarangam.net



கரையடைந்த தீவிலேயே தொடர்ந்து வாழத் தலைப்பட்டார்கள்.

குழந்தைகள் கரையேறிய தீவு நக்க தீவு [நக்க என்றால் அம்மணம்; எனவே அம்மணதீவு அல்லது குழந்தைகள்தீவு] என்றழைக்கப்பட்டது. பெண்கள் கரைதட்டிய தீவு மகிளதீவு [மகிள – பெண்கள்; பெண்கள் தீவு] என்றழைக்கப்பட்டது. ஆனால், விஜய சுப்பராக [இது, இந்தியாவின் மேற்குக் கரையில், பம்பாய்க்கு வடக்கிலுள்ள 'தானா' மாவட்டத்திலுள்ள 'சோப்றா'வாக இருக்கக்கூடும் என அனுமானிக்கப்படுகிறது] என்னும் துறைமுகத்தில் இறங்கினான். கூட்டாளிகளின் வன்செயல்களால் அங்கு அபாயம் தோன்றவே, மீண்டும் கப்பலேறினான்.

வீரமிக்க, விஜய என்ற பெயர் பெற்ற இளவரசன், இலங்கையின் தம்பபானி என்ற பிரதேசத்தில், ததாதகர் இரட்டையர் போன்று தோன்றிய இரண்டு சால மரங்களுக்கிடையில் 'நிப்பான' அடைவதற்காகக் கிடந்த அதே நாளில், கரையிறங்கினான்.

['பக்தர்களிடம் அமைதியான இன்பமும் பரவசமும் ஊட்டுவதற்காகத் திரட்டப்பட்ட மகாவம்சவின் 'விஜயவின் வருகை' என்கிற ஆறாவது அத்தியாயம் இங்கு முடிவடைகின்றது' என இந்த வர்த்தமானகள் அடங்கிய அத்தியாயம் முடிவடைகின்றது.]

உங்கள் அச்சுப்பதிவுத் தேவைகளுக்கு....

தமிழிலும் ஆங்கிலத்திலும்

திருமண அழைப்பிதழ்கள், விளம்பரங்கள்,

வர்த்தக வெளியீடுகள் மற்றும் வேறெந்த

வெளியீடுகளுக்கும் தேவையான

அச்சுப்பதிவுக்கும் அழகான அமைப்புக்கும்

தொடர்புகொள்ளுங்கள்.

கட்டணம் மற்றும் ஏனைய விபரங்களுக்கு

சாரதா : (03)-752-7104

www.tamilarangam.net



# தேடிடும் நண்பர்களுக்கு!

ராகவன்



இரவு வேளைகளில்
வானத்து நட்சத்திரங்களை
தேடுகையில்,
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
சிதறியபடியே சில.
இங்கு இயற்கையும் கூட
சலிப்பை ஊட்டும்.
தேடலும், ஓடலுமாய்
எத்தனை காலம்தான்..?
தேடலில் தொடங்கி
தேடிய பொருள் மறந்து...

சூரியனைப் பறிகொடுத்த
இலையுதிர் காலத்தில்,
ஜேர்மன் நாட்டினில்
இனவெறிக் கொலைகள்.
அன்று கொல்லப்பட்டோரின்
சாம்பலும், கறலும்
இன்று கூட
காற்றில் மணக்கிறதே.
எங்கே மனிதர்கள்?
வரலாற்றிலிருந்து
எதைத்தான் கற்றனர்?

சிறுபான்மையினர்க் கெதிராய்
அடக்குமுறை என
எழுந்த நம் போராட்டம்
முஸ்லீம் மக்களை
அடித்துத் துரத்துவதும்,
கொலை செய்வதுமாய்
நிர்வாணம் அடைந்தபோது,
சிரித்துப் பேசியே
நியாயம் பேசிய ஒருவர்
இன்று சொல்கிறார்
அஞ்ஞூறு வருச பாபர் மசூதியை
நொருக்கிப் போட்டாங்கள்;
இந்தியச் சனங்கள்
குப்பைச் சனங்களாம்!

வரலாற்றிலிருந்து –
எதைத்தான் நாம் கற்றோம்?
என்னத்தை நான் சொல்ல?
தேடலில் ஈடுபடும்
நண்பர்களைத் தேடுகின்றேன்.
அவர்களோ முழுமூச்சாய்
எதையோ தேடியபடி...!
ஊரினில் உலகினில்
ஆயிரம் நடக்கட்டும்,
எமக்கென்ன?
தேடும் பொருள் மறந்து
தேடலில் நாம் திளைப்போம்.

பள்ளிப் பாடலொன்று
எனக்கும் சேர்த்து
இங்கே சமர்ப்பணம்;
என்ன பிடிக்கிறாய் அந்தோனி?
எலி பிடிக்கிறேன் சிஞ்சோரே!
பொத்திப் பொத்திப் பிடி அந்தோனி.
பூறிக் கொண்டோடுது சிஞ்சோரே.

நன்றி: தூண்டில்
தை 1993

www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES S[redacted]
- SEINE

பஞ்சு அருணாசலம்
வழங்கும்

இளையராஜா

கீதாசித்ரா கம்பைன்ஸ்

**K.E.P.Services**
proudly presents



*ING:
KARTHIK
SUHASHINY
GOWDHAMI
NASAR
V.K RAMASAMY
CHARLIE
BABY SHALINI

# சின்னக்கண்ணம்மா

R. ரகு

## CHINNA KANNAMA

6th March SAT 6.30pm

**Monash University Union Theatre, Wellington Road, Clayton**

14th March **Sun 4.00pm**

Phone: 667 0287 Mobile 018 539 744
748 9175(A/H) R. Siva Nathan

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்